வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.06.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 197 | பக்கங்கள் : 16

# நெருக்கடி நிலைக்கு தேர்தல்தான் தீர்வு!

## ஐக்கிய மக்கள் சக்தியும் கூறுகிறது

கொழும்பு, ஜூன் 21

**மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான இறுதித் தெரிவு தேர்தல் மாத்திரமே என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஏற்பட்டுள்ள தீவிர நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் அரசாங்கம் அமைக்கப்படவேண்டும்.

தீர்வாக சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும், அதன் பின்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும்.

நிதிப் பிரச்னை காரணமாக பலர் தேர்தலுக்கு 15



## இலங்கையின் நெருக்கடிக்கு அவுஸ்திரேலிய அரசு உதவும்

### அந்நாட்டு உள்துறை அமைச்சர்

கொழும்பு, ஜூன். 21

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்துக்குள் இருந்துக்கொண்டு உதவுவதாக அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளேயர் ஓ நெய்ல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த 15

## நாணய நிதியத்தின் கலந்துரையாடலுக்கு தாமதமாக சென்ற நிதியமைச்சு செயலர்!

கொழும்பு, ஜூன். 21

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடலில் கலந்துகொண்ட நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தாமதமாகவே கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

கோட்டைப் பகுதியில் போராட்டம் காரணமாக அவர் கூட்டத்துக்கு செல்வதில் தாமதம் ஏற்பட்டது.

அவர் கூட்டத்துக்கு அரை மணி நேரம் தாமதமாக வந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை - தனி ஆட்கள் குழுவொன்று நிதி அமைச்சைச் சுற்றி வளைத்து நிதியமைச்சின் செயலாளரை சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைக்கு செல்லவிடாமல் தடுக்க முயற்சியை ஐக்கிய தேசியக்கட்சி விமர்சித்துள்ளது.

நாட்டின்பொருளாதார மீட்சி முயற்சிகளை 15

## ஜூலை முதலாம் திகதி முதல் யாழில் பங்கீட்டு அட்டைகளுக்கே எரிபொருள்!

### நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன். 21

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அந்தந்த பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நேற்று தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள எரிபொருள் பிரச்னையை தீர்ப்பது தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று ஆராயப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 15

## காலிமுகத்திடலில் கைதுசெய்யப்பட்ட 21 பேரும் பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, ஜூன். 21

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது நேற்று காலை கைதுசெய்யப்பட்ட 21 பேருக்கும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

நிதி அமைச்சின் இரண்டு நுழைவாயில்களை அடைத்து காலி முகத்திடல் 15

## ரணிலை பதவி நீக்க முயற்சியா? அடியோடு மறுக்கிறது பெரமுன!

கொழும்பு, ஜூன். 21

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரை பிரதமர் பதவிக்கு நியமிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு அறிவித்ததாக 15

## மேலும் 23 இலங்கையரை திருப்பி அனுப்பியது ஆஸி.

கொழும்பு, ஜூன். 21

புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட நிலையில் கைதான 23 இலங்கையர்களும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு 15



## நெருக்கடியிலிருந்து ஜனாதிபதி நிச்சயம் நாட்டை மீட்டெடுப்பார்

### பிறந்தநாள் வாழ்த்தில் மஹிந்த

கொழும்பு, ஜூன். 21

நெருக்கடியில் இருந்து ஜனாதிபதி நாட்டை மீட்டெடுப்பார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் ருவிட்டரில் 15

## கடும் மின்சார நெருக்கடி விரைவில் ஏற்படக்கூடும்!

கொழும்பு, ஜூன். 21

இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி தேவையான நிலக்கரி கையிருப்பானது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மாத்திரமே போதுமானது என பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்துக்கு தேவையான 15

## இலங்கைக்கு ஆஸி. 50 மில்லியன் டொலர்!

### அவசர உணவு மற்றும் சுகாதார தேவையை நிறைவு செய்வதற்கு

கொழும்பு, ஜூன்.21

மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் அவசர உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அரசு 50 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள மக்களின் அன்றாட ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய உலக உணவுத் திட்டத்துக்கு அவுஸ்திரேலியா 22 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அவுஸ்திரேலிய தூதரகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. 15

## நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை நான் எம்.பியாகமாட்டேன்!

### தமிக்க பெரேரா திட்டவட்டம்

கொழும்பு, ஜூன். 21

நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும் வரை பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது அமைச்சராகவோ பதவியேற்றப் போவதில்லை என தம்மிக்க பெரேரா உறுதியளித்துள்ளார்.

தம்மிக பெரேராவின் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்கள் மீதான விசாரணையின் போதே அவர் உயர் நீதிமன்றில் இதனை அறிவித்தார்.

மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணை 15

# இப்படியும் நடக்கிறது...!

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே சுமூகமான உறவு இருக்கின்றதா என்பதில் ஒரு கேள்வி பலரிடம் இருக்கின்றது.

தான் பிரதமராக பதவியேற்பதெனில் என்ன என்ன செய்ய நினைக்கின்றேன் என்பதையும், எதை எதை யெல்லாம் ஜனாதிபதி தரப்பிலிருந்து அவர் எதிர்பார்க் கின்றார் என்பதையும் நிச்சயம் ரணில் ஜனாதிபதியிடம் தெரிவித்து, அவரது சம்மதத்தைப் பெற்றுக்கொண்டுதான் பதவியேற்றிருப்பார் என்று நம்பித்தானே ஆகவேண்டும்.

அதனால்தான், இந்த இருபத்தியொராவது அரசமைப்பு திருத்தத்தை கொண்டுவர இருவருமே சேர்ந்து படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த, துறைமுகங்கள், கப்பல் போக் குவரத்து, விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவும் இந்த இருபத்தியொன்று நிச்சயம் அமைச்சரவையின் அனுமதியைப் பெறும் என்று நம் பிக்கை வெளியிட்டதாக தெரியவருகின்றது.

அப்படியெனில், அமைச்சரவை அனுமதியைப் பெறு கின்ற விடயத்தில் அது- அதாவது, இருபத்தியொன்று சித்தியடைந்து விட்டது. சிறிய ஆறு ஒன்றைக் கடந்த பின்னர் மிகப்பெரிய சமுத்திரத்தை கடக்கவேண்டியது இனித்தான். பாராளுமன்றில் அது அங்கீகரிக்கப்பட இன் னும் பல மைல்கள் தூரம் இருக்கின்றது.

ஆனால், இந்த விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் கூட்டாக பயணித்தாலும், ஒரு விடயத்தில் இருவருக்குள் ளும் ஒரு கயிறிழுப்பு நடந்துகொண்டுதான் இருக்கின்றது என்கின்றன கொழும்பு தகவல்கள்.

இன்றைய மத்திய வங்கி ஆளுநரின் ஆளுமை பற்றி முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந் தேன். அவர் மத்திய வங்கியில் பிரதி ஆளுநராக இருந்த போதே, சர்வதேச நாணய நிதியத்திலும் ஒரு ஆலோசகராக பணியாற்றியவர்.

அவுஸ்திரேலியாவில் முக்கிய பதவியில் இருந்த அவரை ஜனாதிபதி அழைத்துவந்து இந்த பதவியை வழங்கினார். அவர் மீண்டும் மத்திய வங்கிக்கு வந்தது, பலரதும் பாராட் டுக்குரியதாகியிருந்தது.

பசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவிக்கு வந்ததும், அப்போது இராஜாங்க அமைச்சராக இருந்த அஜித் நிவாட் கப்ராலை அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யவைத்து, மீண்டும் மத்திய வங்கியின் கவர்னராக நியமித்தார்கள்.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவர் கப்ரால். அப்போதும் பல்வேறு புகார்கள் அவர்மீது சுமத்தப்பட்டதுண்டு. அத்தகைய ஒருவரை எதற்காக மீண்டும், அதுவும் அவர் ஓர் அரசியல்வாதியாக மாறிய பின்னர் கொண்டுவந்தார்கள் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

ஆனால், இப்போது ஆளுநராக இருக்கும் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்கே, இந்த மாத இறுதியில், அடுத்த ஆறு ஆண்டுகளுக்கான நிரந்த ஆளுநராக நியமிக்கப்படவேண்டும்.

அவரை அந்தப் பதவியில் நிரந்தரமாக நியமிக்கவேண் டும் என்று மத்திய வங்கியின் முன்னாள் பணியாளர்கள் பலர் கூட்டாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருப்பதாக தெரியவருகின்றது. அவ்வாறு கடிதம் எழுதவேண்டிய தேவை ஏன் வந்தது என்பது குறித்து கொழும்பில் சில துறை சார்ந்த நண்பர்களிடம் பேசியபோது தான் அது தெரியவந் தது.

நல்லாட்சி அரசின் காலத்தில்- அதுதான், ரணில் பிரத மராக இருந்த காலத்தில், மத்திய வங்கியில் நடந்த பாரிய நிதி மோசடி மிகவும் பிரபல்யமானதுதான். இந்த மோசடி நடந்த காலத்தில் நந்தலால் வீரசிங்கே, மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக இருந்தவர். அந்த மோசடிகளை வெளிச் சத்துக்கு கொண்டுவந்தவர்களில் முக்கியமானவர் இவரே என்று கூறப்பட்டதும் உண்டு. இதனால்தான், அவர் தொடர்ந்து ஆளுநராக தொடர்வதை ரணில் விரும்ப வில்லை என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர், அப்போது ஆளுநராக இருந்த இந்திரஜித் குமார சாமி திடீரென்று பதவி விலகியதைத் தொடர்ந்து, அப் போது பிரதி ஆளுநராக இருந்த நந்தலால், அடுத்த ஆளுநர் நியமிக்கப்படும்வரை மத்திய வங்கியின் தலைமை நிர்வாகி யாக, அவரே சில நாட்கள் மத்திய வங்கியை நிர்வகித்தார்.

கடந்த இருபதாம் ஆண்டு அக்டோபரில் முன்கூட்டியே பதவியிலிருந்து இளைப்பாறிய நந்தலால், அவுஸ்திரேலி யாவில் குடியேறியிருந்தார். அவரை வலுகட்டாயமாக அழைத்துவந்த ஜனாதிபதி, அவரை தொடர்ந்து அந்தப் பதவியில் நிரந்தரமாக வைத்திருக்க விரும்புகின்றபோதி லும், துறைசார்ந்த அமைச்சரான ரணில், அவரை மாற்று வதற்கு முயன்று கொண்டிருக்கிறார்.

இந்த விவகாரம்தான் இப்போது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தியிருக் கின்றன என்கின்றது கொழும்புத் தகவல்.!

- ஊர்க்குருவி

# பிரச்னைக்கு தீர்வே தேவை தேர்தல் நடத்துவது அல்ல!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



வவுனியா, ஜூன் 21

பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண்பது, மக்களை கஷ் டங்களில் இருந்து வெளியே கொண்டு வருவதுதான் முக்கி யம். மாறாக தேர்தல் நடத்து வது அல்லது ஆட்சியின் அமைப்பை மாற்றுவது அல்ல என்று கடற்றொழில் நீரி யல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண் டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஈ. பி. டி. பி. கட்சி யின் பொதுக் கூட்டத்தின் பின் னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சியின் பொதுச்சபை கூடி பல விடயங்களை ஆராய்ந்தி ருந்தோம். குறிப்பாக, கட்சிக் குள் இருக்கக்கூடிய முரண் பாடுகள் தொடர்பாக கலந்து ரையாடியிருந்தோம். அத் தோடு வன்னி தேர்தல் மாவட்ட மக்கள் எதிர்கொள்கின்ற பிரச் னைகள் தொடர்பாக கலந்து ரையாடியுள்ளோம்.

எரிபொருள் தொடர்பாக இந்தியா வழங்கிய கடன் முடிவடைந்துள்ளது மேலும் இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை தொடர் பாக இந்தியாவுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளதா என செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது,

அரசாங்கம் வெவ்வேறு பேச்சு நடத்தி இது தொடரும். நேற்று முன்தினம் இந்திய பாராளுமன்றத்திலே வெளி விவகார அமைச்சின் ஆலோ சனை கூட்டத்தில் காத்திரமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவும் வேலையை முன்னெடுக்கவுள் ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் நாட்டின் பொருளாதார சிக்கல் காரண மாக தேர்தல் ஒன்று நடாத்தப் பட வேண்டும் என கூறி வருகின்றனர் இது தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன என வினவிய போது, இன்றைய சூழலில் தேர்தல் முக்கிய மில்லை, குறிப்பாக பொருளா தார பிரச்னைக்கு தீர்வு காண் பது, மக்களை கஷ்டங்களில் இருந்து வெளியே கொண்டு வருவதுதான் முக்கியமே மாறாக தேர்தல் நடத்துவது அல்லது ஆட்சியின் அமைப்பை மாற்றுவது அல்ல - என தெரிவித்தார். (ஐ)

# இ. தொ. கவின் யோகராஜா கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்!

கொழும்பு, ஜூன் 21

நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜா, இலங்கை தொழிலாளர் காங்கி ரஸின் அடிப்படை கட்சி உறுப் பினர் பதவியில் இருந்து நீக்கப் பட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரி யாலயத்தில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுக் கூட்டத் தில் வேலு யோகராஜா மீதான குற்றம் விசாரணை செய்யப் பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் ஆராயப்பட்டு, உண்மைத்தன்மையின் அடிப் படையில் நிர்வாக சபையால் அவர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறி விப்பை இ.தொ.கா. ஊடகப் பிரிவு நேற்று வெளியிட் டுள்ளது.கந்தப்பளை காணி விவகா ரம் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. (ஐ)

# வடமராட்சியில் நேற்று ஆசிரியர்கள் போராட்டம்!

வடமராட்சி, ஜூன் 21

தமக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்று திங்கட்கிழமை நெல்லி யடி மத்திய கல்லூரிக்கு முன் பாக க. பொ. த. சாதாரண தர விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

நேற்றுமுன்தினம் வரை சகல எரிபொருள் நிரப்பு நிலையங் களிலும் விடைத்தாள் மதிப் பீடு செய்யும் ஆசிரியர்களுக் கும் எரிபொருள் வழங்கப்பட் டது. இந்நிலையில் நேற்று அது நிறுத்தப்பட்டது. இதை யடுத்தே ஆசிரியர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த பரீட்சை விடைத்தாள் மதிப் பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என்ற நெல்லி யடி பொலிஸ் பொறுப்பதிகாரி வழங்கிய உறுதிமொழியை அடுத்துப் போராட்டம் நிறை வுக்கு வந்தது.

எரிபொருள் தமக்கு முறை யாக கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யாவிடின் இன்று முதல் மதிப்பீட்டு பணியில் ஈடுபடமாட்டோம் என்று ஆசி ரியர்கள் தெரிவித்தனர். (ஐ-2)

# வெள்ளவத்தையில் வழிப்பறி அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் முன்னர் ஒருபோ தும் இல்லாதவாறு தலைதூக் கியுள்ள பொருளாதார நெருக் கடியை அடுத்து வழிப்பறி கொள்ளைகள் அதிகரித்துள் ளன. குறிப்பாக, வெள்ளவத் தைப் பகுதியில் கடந்த சில தினங்களாக ஏ. ரி. எம். இல் பணம் எடுப்போரைக் குறி வைத்தும் தனியாக செல்லும் பெண்களை மிரட்டியும் வழிப்பறி கொள்ளைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

மோட்டார் சைக்கிளில் வரும் குழுவினர் இவ்வாறு ஏ. ரி. எம்மில் பணம் எடுப்போ ரைக் குறிவைத்து பணம் பறிப்பதாக பல்வேறு புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நேற்றுக் காலை வெள்ள வத்தை கடற்கரை வீதியில் முச்சக்கர வண்டி ஒன்றில், பயணித்த யுவதி ஒருவர் அதனை நிறுத்தி விட்டு அருகில் இருந்த ஏ.ரி.எம்மில் பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பிய சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வேகமாக வந்த இருவர் அவரிடம் பணத்தை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த யுவதி வைத்திய சாலை செலவுகளுக்காக ரூபாய் 15,000ஐ வங்கியில் இருந்து எடுத்த சமயமே அவரிடமி ருந்து பணமும் ஏ.ரி.எம். அட்டையையும் பறித்துக் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இடம் பெற்ற சமயம் அவ் இடத்தில் மக்கள் கூட்டமாக இருந்த போதிலும் கண் இமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பணத்தை பறித்துச் சென்றுள்ளனர். அதேவேளை எவரும் உதவ முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

எனவே, தனியாக சென்று வங்கிகளில் பணம் எடுப்பவர் கள் மற்றும் தங்கச் சங்கிலிகள் அணிந்து கொண்டு வீதியில் பயணிப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

மேலும் கூடுமான வரை பொருட்கள் கொள்வனவு களில் ஈடுபடும் போது வங்கி பணப்பரிவர்த்தனை அட்டை களைப் பயன்படுத்துவதுடன், தங்க ஆபரணங்களை அணிந்து கொண்டு வெளியில் செல் வதை தவிர்க்குமாறு அறிவு றுத்தப்படுகின்றனர். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 24

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெ றவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்க மைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சோதி லிங்கம் தலைமையில் நடக்கும் இந்த நிகழ்வில், சைவப் புலவர் சி. கா. கமலாநாதன் " திருவா சகம் எனும் தேன்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற் றுவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.06.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆணி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜனாதிபதியின் கனவு நிறைவேறுமா?

மீண்டும் போராட்டங்கள் துளிர்விடுகின்றன. போராட்டங்களுக்கான சூழல் இருக்கும் வரையில், இந்த நிலைமையை முற்றிலுமாக கட்டுப்படுத்த முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரையில், தமது போராட்டங்கள் தொடருமென்று, கோட்டா கோ - கம ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதியோ தான் தோல்வியடைந்த ஜனாதிபதியாக செல்ல விரும்பவில்லை - 69 இலட்சம் மக்களின் ஆணையின் அடிப்படையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் நான், எனது பணிகளை நிறைவு செய்துவிட்டுத்தான் வெளியேறு வேனென்று கூறிவருகின்றார். ஜனாதிபதியின் கனவு ஈடேறுமா?

ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பதில், இன்னும் முழுமையான வெற்றியை, பெறமுடியவில்லை. 21ஆவது திருத்தச்சட்டம் தொடர்ந்தும் இழுபறிநிலையிலேயே இருக்கின்றது. 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறும் வரையில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் உருவாகுவதற்கான வாய்ப்பில்லை. ஒருவேளை, 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறாது போனால், இந்த அரசாங்கம், ஒரு தளம்பல் நிலையிலேயே இருக்க நேரிடும். அரசாங்கம் தளம்பல் நிலையில் இருக்கின்றபோது, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் அவ்வப்போது வெளிக்கிளம்பும். இதனை தவிர்க்க முடியாது. ஏனெனில், பொருளாதார நெருக்கடி தீவிரமாக இருக்கின்றபோது, அரசாங்கம் உறுதியானதாக இருக்க வேண்டும். ஆனால், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, ஏற்பட்ட அரசியல் நெருக்கடி இன்றுவரையில் தீர்க்கப்படவில்லை.

இலங்கையின் முன்னைய ஜனாதிபதிகள் எவருமே சந்திக்காத நெருக்கடிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்கொண்டிருக்கின்றார். இத்தனைக்கும் சிங்கள மக்களின் வரலாற்று தலைவனாக வேண்டுமென்னும் கனவோடு அதிகாரத்தை கைப்பற்றியவர். ஆனால், இன்றோ, ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதியென்னும் பெயரோடு, போய்விடக் கூடாதென்னும் கவலையோடு, நாட்களை கடத்திக் கொண்டிருக்கின்றார்.

ராஜபக்ஷ குடும்பத்தைப் பொறுத்தவரையில் தற்போது அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் என்னும் வகையில், அனைத்து ராஜபக்ஷக்களின் தவறுகளையும் சுமக்க வேண்டிய இக்கட்டு நிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய இருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷ வெளியேறியதைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ அரசியல் அரங்கில் இப்போது பேசுபொருளாக இல்லை. பஸில் ராஜபக்ஷவும் இப்போது பேசுபொருளாக இல்லை. பொருளாதார நெருக்கடியில், நிதியமைச்சகராகவிருந்த, பஸில் ராஜபக்ஷவுக்கு பிரதான பங்குண்டு. ஆனால், அவர் வெளியேறியதைத் தொடர்ந்து, பஸில் ராஜபக்ஷவின் தவறுகளையும் ஜனாதிபதியே சுமக்க வேண்டியேற்பட்டிருக்கின்றது. அனைத்து ராஜபக்ஷக்களினதும் தோல்வியை சரிசெய்து, ஒரு வெற்றிபெற்ற ஜனாதிபதியாக வெளியேற முடியுமா?


ஆனால், ஒரு விடயங்களை செய்துவிட்டு, மாறுபட்ட ஜனாதிபதியாக வெளியேறுவதற்கான வாய்ப்பும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு இல்லாமலில்லை. சந்திரிகா குமாரதுங்க காலத்திலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், நடைபெறவில்லை. இப்போதும் பேசப்படுகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்க வேண்டுமென்னும் வாதம், இன்று, சற்று வலுவாகவே எழுந்திருக்கின்றது. சஜித் பிரேமதாஸவும் அதனை ஆதரிப்பதாகக் கூறுகின்றார். ஆனால், ஒருவேளை, அவர் அதிகாரத்துக்கு வந்தால், அது நடக்குமா என்பது கேள்விக்குறிதான்.

சந்திரிகாவும் அப்படித்தான் கூறியிருந்தார். ஆனால், அதிகாரத்துக்கு வந்ததும் அது கிடப்புக்கு சென்றுவிட்டது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய இந்த விடயத்தை உண்மையிலேயே கையிலெடுத்தால், தற்போதுள்ள ஆதரவு சூழலைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாமலாக்கலாம். இது நடந்தால், கோட்டாபய ராஜபக்ஷதான், கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருப்பார். ஒரு புதிய வரலாற்றை ஆரம்பித்து வைத்தவர் கோட்டாபய என்னும் பெயருடன் அவர் விடைபெற முடியும். இதற்கு அவர் தயாராக இருக்கின்றாரா? வேறு என்ன விடயங்களை செய்தாலும், அவரை தூக்கிநிறுத்தும் வகையில் அப்படியொன்றும் அதிசயங்கள் நடந்துவிடப்போவதில்லை. இங்கே குறிப்பிடப்பட்டது போன்று, சில வரலாற்று தீர்மானங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டால், ஒருவேளை அவரின் கனவு நிறைவேறவும் கூடும்.

# எரிபொருள் வரிசைகளில் அதிகரிக்கும் மனித அவலங்கள்!

**அலசுவது இராஜதந்திரி**

*எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்கும்போது மயங்கி வீழ்ந்து மரணித்தவர்களின் எண்ணிக்கை தற்போது பதினைந்தாக அதிகரித்துள்ளது. இதுதவிர, எரிபொருள் நிலையங்களில் மக்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்று பொறுமையிழந்தவர்களாக தமது ஆத்திரத்தை வன்முறையாக வெளிப்படுத்தவும் ஆரம்பித்துள்ளனர்.*




*ஒருபுறம் தந்தை தனது முச்சக்கர வண்டியிலும் மறுபுறத்தே மகன் தனது மோட்டார் சைக்கிளிலும் எரிபொருளுக்காக அருகருகே நின்ற போது ஒரு கட்டத்தில் தந்தையார் மூச்சு பேச்சில்லாது தனது வாகன இருக்கையில் சாய்ந்து விடுகிறார். அப்போது மகன் அருகே வந்து தந்தையின் மார்பில் தடவிக் கொடுத்து அவரை மயக்க நிலை யிலிருந்தும் மீட்க முயல்கின்றான். அருகே எரிபொருளுக்காக காத்து நின்ற ஏனைய வாகன சாரதிகளும் அருகே வந்து அந்த இளைஞனுக்கு உதவ முற்படுகின்றனர். அச்சமயத்திலேயே அந்தத் தந்தைக்கு சம் பவித்தது மயக்கமல்ல மரணம் என்பதை அனைவரும் அறிந்து கொள்கின்றனர். தந்தையை பறிகொடுத்த மகன் தாயிடம் கையடக்கத் தொலைபேசி மூலமாக "அம்மா அப்பா எம்மை விட்டு போய் விட்டார்" என்று கதறியமை அருகில் நின்ற அனைவரையுமே கண்கலங்க வைத் திருந்தது.*

*கொழும்பின் சுற்றுப்புற பகுதியொன்றில் கடந்த வாரம் நிகழ்ந்த இந்த மரணம் உட் பட பதினைந்து மரணங்கள் நாடளாவிய ரீதியில் இதுவரை எரிபொருளுக்காக வரி சையில் நின்றோர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.*

*இத்தகைய பின்னணியிலேயே எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக மட் டுமல்ல. சமையல் எரிவாயு வழங்குகின்ற நிலையங்களுக்கு முன்பாகவும் வன்முறை கள் தற்போது அடிக்கடி இடம்பெற ஆரம் பித்துள்ளன.*

*இதன்காணமாகவே, ஆயுதம் ஏந்திய பொலிஸாரும் ஆயுதப்படையினரும் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காவலில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

*மக்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்று கலவரமடைய ஆரம்பித்துள்ள நிலையிலேயே பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸாரையும் ஆயுதப் படையினரையும் பொறுமை காத்து நிலை மையை கையாளுமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கை வதிவிட பிரதிநிதியான ஹனா சிங்கர் ஹம்டி கேட்டுக்கொண்டுள்ளார்.*

*எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக பாதுகாப்பு படையினரை பொறுமை காக்கும்படி ஐ. நா வதிவிட பிரதிநிதி கேட்டுள்ளமை அவரின் மனி தாபிமான பண்பையும் அவர் சார்ந்த நிறு வனத்தின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால், எரிபொ ருள் நிலையங்களில் நிலைமைகள் மோச மடைவது குறித்து இலங்கையின் ஆட்சி யாளர்கள் பாராமுகமாக இருப்பதோடு பாதுகாப்பு படையினருக்கு நிலமைகளை கையாள வேண்டிய விதம் குறித்து இதுவரை எத்த கைய அறிவுறுத்தல்களையும் விடுக்காமலிருக்கின்றனர். இதன்காரணமாகவே பாதுகாப்பு படையினர் பல இடங்களில் அத்துமீறிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.*


*எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றை பெறுமிடங்களில் மக்கள் பொறுமையிழந்த சம்பவங்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக இடம் பெற்று வருகின்றன. இரு தினங்களுக்கு முன்னர் முல்லைதீவு - விசுவமடு பிரதேசத் திலும் எரிபொருள் நிலையமொன்றில் இடம்பெற்ற வன்முறையில் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர். அத்துடன், இரு சந்தேக நபர்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*எரிபொருள் நிலையங்களில் ஆயுதப் படையினர் அத்துமீறும் சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் ஸ்தாபன இலங்கை வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி கேட்டுக்கொண்டுள்ளமையை நோக்கும்போது தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக எழுந்துள்ள அசாதாரண நிலைமை குறித்து சர்வதேச சமூகமும் தனது கவனத்தை செலுத்தியுள்ளதையே அறிய முடிகின்றது.*

*அத்துடன், அத்தியாவசிய தேவைகளுக்காக நீண்ட வரிசையில் நிற்கும்போது இயல்பாகவே பொறுமையிழக்கும் நிலைக்கு தள்ளப்படும் அப்பாவி மக்களை கையாள முடியாத ஆயுதப்படையினர் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற போது அந்த மாகாணங்களில் அப்பாவி பொது மக்களை எவ்வளவு தூரம் மூர்க்கத் தனமாக நடத்தியிருப்பர் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.*

*எனவே, இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, சட்டம் ஒழுங்கை பேண வேண்டியவர்களின் அத்துமீறல்கள் மற்றும் நீண்ட வரிசைகளில் நிற்கும் போது ஏற்படுகின்ற மோதல்கள், மரணங்கள் என்பவை பொருளாதார ரீதியான பிரச்னைகள் பெரும் மனிதாபிமானப் பிரச்னையாக மாற் றம் கண்டு வருவதையே எடுத்துக்காட்டுகின்றன.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**
பண வரவில் இருந்த தடை விலகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெரியவர்களின் ஆதரவுடன் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். பணம் வீடு தேடி வரும். விழிப்புணர்வு தேவை.

**இடபம்**
தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். ஒரு சிலருக்கு இட மாற்றம் ஏற்படும். சங்கடங்களை சரி செய்து தொழில் வளர்ச்சிக்கு வழி காண்பீர்கள்.

**மிதுனம்**
உங்கள் திறமை வெளிப்படும். புதிய முயற்சி நன்மை அளிக்கும். நினைத்ததை செய்து முடிப்பீர்கள். நல்ல எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும்.

**கடகம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். எதிரிகளால் தொல்லை ஏற்படும். நினைத்த செயலை நிறைவேற்ற முடியாமல் போகும். குழப்பம் அதிகரிக்கும். மற்றவர்களிடம் வீண் விவாதம் வேண்டாம்.

**சிம்மம்**
உங்கள் முயற்சி நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டாகும். உறவினர் உதவியுடன் உங்கள் எண்ணம் நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தொழில் முயற்சி வெற்றியாகும்.

**கன்னி**
உங்களுடைய செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் அகலும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். நன்மை அதிகரிக்கும். லாபகரமான நாள்.

**துலாம்**
பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பயணங்களால் நன்மை உண்டு. பணியிடத்தில் செல்வாக்கு உயரும்.

**விருட்சிகம்**
தாய்வழி உறவினர்களின் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் சாதகமான நிலை ஏற்படும் உண்டாகும்.

**தனுசு**
கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை சரியாகும். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். நீங்கள் நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நல்ல எண்ணம் நிறைவேறும்.

**மகரம்**
தொழிலில் இருந்து வந்த போட்டி விலகும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய வேலைக்காக முயற்சிப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும்.

**கும்பம்**
புதிய பாதையில் பயணிப்பீர்கள். தொல்லை கொடுத்து வந்தவர் விலகுவர். பிரச்னைகளை சரி செய்வீர்கள். பணியிடத்தில் இருப்பவருக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். ஆதாயம் காண்பீர்கள்.

**மீனம்**
மனதில் இருந்த குழப்பம் விலகும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். நேற்றைய அடிப்படை தேவை இன்று நிறைவேறும். குடும்பத்திற்காக சுபசெலவு அதிகரிக்கும். வியாபாரத்தில் உங்கள் திட்டங்களை மாற்றி அமைப்பீர்கள். முயற்சி இன்று பலிக்கும்.

# ஈழத்தமிழர் கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

## முதலமைச்சர் ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 21

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனது உலக அகதிகள் தினச் செய்தியில் முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அகதிகள் தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இது தொடர்பாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் "ஐக்கிய நாடுகளின் பொது அவையில் 2000ஆம் ஆண்டில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில், ஆண்டுதோறும் ஜூன் 20ஆம் நாள், உலக அகதிகள் தினம் எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்பதே தமிழர் வாழ்வியல் மரபு. உலகெங்கும் அகதிகளாக வாழ்பவர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டிய நிலையில், தாய்த் தமிழ் நாட்டை நாடி வந்த இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களின் வாழ்க்கை மேம்பட நமது அரசு உறுதியான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.



அகதிகள் முகாம் என்ற பெயரை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என மாற்றம் செய்து, அவர்களின் வாழ்வில் ஏற்றம் பெறுவதற்கான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. வாழ்வுரிமை - குடியுரிமை சார்ந்த கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம் என மாற்றம் செய்து, அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெறுவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வாழ்வுரிமை - குடியுரிமை சார்ந்த கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# அ. தி. மு. க. இரண்டாக உடைவதற்கு பாரதிய ஜனதா கட்சியே காரணம்!

சென்னை, ஜூன் 21

அ. தி. மு. க. கட்சி இரண்டாக உடைய பா. ஜ. க தான் காரணம். அந்தக் கட்சியை பா. ஜ. க. பொம்மைபோல ஆட்டுவித்துக் கொண்டிருக் கிறார்கள் என்று கூறியுள்ளார் காங்கிரஸ் கட்சி யின் முன்னாள் தலைவர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன்.



பா. ஜ. க மக்களைத் துன்புறுத்தி வருகிறது. அடுத்த தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென மோடியும், அமித்ஷாவும் கனவு கண்டு வருகின்றனர். ஒருவேளை அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்திய துணைக் கண்டமே இல்லாமல் போய்விடும். எனவே, ஜனநாயகத்தையும் மக்களையும் காப்பாற்ற நாம் களம் இறங்க வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி, அக்னி பாதை திட்டத்தை மோடி கொண்டு வந்துள்ளார். இந்தத் திட்டத்தை எதிர்த்தால் தான் இந்தியாவுக்கு வருங்காலம் உண்டு. மீண்டும் மோடி அரசு வராமல் தடுக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்.

தமிழகத்தில் எதிர்க்கட்சியாக வரவும், வலுவாக கால் ஊன்றவும் கோடிக்கணக்கில் பா. ஜ. க. செலவு செய்கிறது. இதை எல்லாம் முறியடிக்க வேண்டும். பா. ஜ. கவை தமிழகத்தில் இருந்து விரட்ட வேண்டும். தமிழகத்தில் பாஜக கால் ஊன்றாமல் இருக்க தி. மு. க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

அ. தி. மு. க. இரண்டாக உடைய பா. ஜ. க தான் காரணம். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, அ. தி. மு. க. விவகாரங்களில் பா. ஜ. க. தலையிடுகிறது. அந்தக் கட்சியை பொம்மைபோல ஆட்டுவித்து வருகின்றனர் - என்றார். (ஐ)

# அக்னி பாதை திட்டத்தை மத்திய அரசு விடவேண்டும்!

## மக்கள் நீதி மய்யம் அறிக்கை

சென்னை, ஜூன் 21

ஹஅக்னி பாதை திட்டத்தால் தேசம் அக்னிப் பிழம்பாய் மாறிய தால் மத்திய அரசு இந்தத் திட்டத் தைக் கைவிட வேண்டும் என்று கமல்ஹாசனை தலைமையாகக் கொண்ட மக்கள் நீதி மய்யம் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சி நேற்று விடுத்த அறிக்கையில், "அண்மையில் மத்திய அரசு அறிவித்த ஹஅக்னி பாதை" திட்டம் நாடு முழுவதும் கலவரத்தை உண்டாக்கியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு வீரர்களை ஒப்பந்த அடிப்படையில் தெரிவு செய்தால், புதிதாக சேருபவர்கள் மட்டுமல்ல, ஏற்கெனவே இராணுவத்தில் பணிபுரிபவர்களும் மனச் சோர்வடைவர்.

முப்படைகளிலும் 4 ஆண்டுகள் மட்டுமே வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் அக்னி பாதை திட்டம், பெயருக்கேற்ப நாடு முழுவதும் ரயில்கள் எரிப்பு, வாகனங்களுக்கு தீ வைப்பு என இளைஞர்களை கொந்தளிக்கச் செய்துள்ளது. இராணுவம், கடற்படை, விமானப்படையில் அதிக அளவில் இளைஞர்களை சேர்ப்போம் எனக் கூறி தொடங்கப்படும் இத்திட்டத்தால், தங்கள் இராணுவப் பணி கனவு கலைந்துபோய் விட்டதாக புகார் தெரிவிக்கின்றனர் இளைஞர்கள்.

பிஹார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹரியாணா, தெலங்கானா, ராஜஸ்தான், டில்லி என பல மாநிலங்களில் பரவிய போராட்டங்கள், தமிழ்நாட்டிலும் தொடங்கி விட்டன.

தேசத்தின் எல்லையைப் பாதுகாக்க, உயிரையே தியாகமாகத் தரும் வேலையை, எவ்வித பணிப் பாதுகாப்பும் இல்லாத ஒப்பந்தப் பணியாளர்களிடம் ஒப்படைப்பது சரிவருமா? பெரு முதலாளிகளுக்கு சலுகைகளை அள்ளித் தரும் மத்திய அரசு, பணத்தால் மதிப்பிட முடியாத இராணுவப் பணியில் சிக்கனம் பார்ப்பது சரியல்ல.

நாடு முழுக்க கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றித் தவித்து வருகிறார்கள். அவர்களுக்கு பணிவாய்ப்பு ஏற்படுத்தித் தருவது மத்திய அரசின் கடமை. அதேசமயம், தொலைநோக்கற்ற, குறுகிய மனப்பான்மையுடன் கூடிய திட்டங்களை வகுத்து, இளைஞர்களை ஏமாற்றக் கூடாது. ஹஅக்னி பாதை "திட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்"- என்றுள்ளது. (ஐ)

# பொறுமையாக இருங்கள் ரணில் தீர்வு வழங்குவார்!

## வஜீர அபேவர்தன நம்பிக்கை

**கொழும்பு, ஜூன் 21**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பல பிரச்சனைகளுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உரப் பிரச்னை இதுவரை வெற்றிகரமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். ஆகையினால், பதற்றமடையாமல் பொறுமையாக இருந்தால், எஞ்சியுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார்.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்ட நிலையில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை சில வாரங்களுக்கு முன்னர் ராஜினாமா செய்தது. சர்வ கட்சி அரசாங்கம் அமைக்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் எவரும் முன்வராததையடுத்து ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றது தெரிந்ததே. (அ)



# கிளிநொச்சி இ.போ.ச. பஸ் சாலையை தனியார் பஸ் சேவையினர் முற்றுகை!

கிளிநொச்சி, ஜூன் 21

டீசல் வழங்குமாறு தெரிவித்து கிளிநொச்சி அரச பஸ் சாலையை தனியார் பஸ் சேவையினர் முற்றுகையிட்டனர்.

நேற்று முற்பகல் அரச பஸ் சாலையின் பிரதான வீதியை மூடி போராட்டம் ஒன்றை தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்னெடுத்தனர்.

இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பர கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது. தொடர்ந்து குறித்த பகுதிக்கு பொலிஸ் அதிகாரிகள் சென்று கலந்துரையாடி சுமூகமான நிலைக்கு கொண்டு வந்தனர்.

தனியார் பஸ் சேவையினருக்கு தேவையான எரிபொருளை அரச பஸ் சாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு அறிவித்த நிலையில், எரிபொருளை கிளிநொச்சி சாலையினர் வழங்குவதில்லை எனப் பொலிஸாரிடம் தனியார் பஸ் சாரதிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தமது சேவையை முன்னெடுக்க எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்றால், அங்கு டீசல் தர மறுப்பதாகவும், அரச பஸ் சாலைகளில் பெறுமாறு தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, தமக்கு தேவையான எரிபொருள் மாத்திரமே கிடைப்பதாகவும், அதில் தனியார் சேவையினருக்கு வழங்க முடியாதுள்ளதாகவும் இ.போ.ச. பஸ் சாலையினர் தெரிவிக்கின்றனர்.

இரு தரப்புடனும் பேசிய பொலிஸார், தனியார் பஸ்களை தனி வரிசைக்குட்படுத்துமாறும், ஏனைய வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும் போது 10 வாகனங்களுக்கு பின் ஒரு பஸ் என்னும் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய நிலையில் நிலைமை சுமூகமடைந்தது.

ஏனைய பிரதேசங்களில் அமைச்சின் முடிவுக்கமைவாக அரச பஸ் சாலைகளில் டீசல் வழங்கப்பட்டு வரும் நிலையில், கிளிநொச்சியில் மாத்திரம் மாறுபட்ட நிலை காணப்படுவது தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர். (அ)

# சனத் நிஷாந்தவின் சகோதரர் கைது!

கொழும்பு, ஜூன் 21

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் அடாவடியில் ஈடுபட்ட மொட்டு கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் சகோதரரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் வைத்து அண்மையில் இவர் ஒருவரை கடுமையாக தாக்கினார். பொலிஸாரின் கடமைக்கும் இடையூறு விளைவித்தார். இந்நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# பாட புத்தகங்களுக்கான கடதாசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

எதிர்வரும் கல்வியாண்டுக்கான பாடசாலைகளில் அடிப்படைத் தேவைகளை எவ்வித தட்டுப்பாடும் இன்றி பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளின் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசிகள் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு பாடசாலைச் சீருடைகளுக்கு தேவையான பொருட்களை வழங்குவது குறித்து உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் சீன அரசுடன் கலந்துரையாடல்கள் இடம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

2022 க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்ரோபரிலும் 2022 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை நவம்பர் மாதத்திலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெடிபொருள் தட்டுப்பாடு கல் குவாரிகளுக்கு பூட்டு!

## லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம்

கொழும்பு, 21

கற்பாறைகளை வெடிக்க வைக்கும் அமோனியம் நைத்திரேட் உள்ளிட்ட வெடிபொருட்கள் இறக்குமதி செய்யப்படாததால் தற்போது கல் குவாரி மூடப்பட்டுள்ளது.

இதனால்இ இத்தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கானோரின் வேலை வாய்ப்பு அபாயத்தில் உள்ளது.

அமோனியம் நைத்திரேட் உள்ளிட்ட வெடிபொருட்கள் இலங்கை வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தினால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதில் கடைசியாக மார்ச் மாதம் இடம்பெற்றது.

ஆனால், தற்போது நிலவும் டொலர் நெருக்கடியில் வெடிபொருட்களை இறக்குமதி செய்வது பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. (அ)

# பெருந்தோட்ட மக்களுக்கு விசேட நிவாரணம் தேவை

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 21

“தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும்.” என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது. எரிபொருட்களின் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

எரிபொருட்களை பெறுவதற்கான வரிசைகளும் பல கிலோமீற்றர் வரை நீண்டு செல்வதோடு எரிபொருட்களை பெற பல நாட்கள் தொடர்ந்து வரிசைகளில் நிற்கவேண்டிய நிலைமை தோன்றியிருக்கிறது.

இந்நிலைமை நாட்டின் அனைத்து துறைகளின் செயல்பாட்டையும் ஸ்தம்பிதம் அடைய செய்திருக்கின்றது. குறிப்பாக பொருட்களின் தட்டுப்பாடு ஒருபக்கம் இருக்க கிடைக்கப்பெறும் பொருட்களின் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருக்கின்றது. வழமையான நாட்களிலேயே முறையான விநியோக வழிமுறையில்லாத தோட்ட பகுதிகள் பெருமளவு பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது. இச்சூழ்நிலையில் உடனடியாக தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரண திட்டமும் முன்வைக்கப்படவேண்டும்.

தோட்டங்களின் வேலை நாட்களும் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. தோட்டங்களில் இருந்து வெளி நகர்புறங்களில் வேலை செய்தவர்கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். போக்குவரத்து நெருக்கடியினால் வெளி இடங்களில் சென்று வேலைகளை செய்வதற்கும் முடியாது இருக்கின்றது. மறுபுறம் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. பொருள் தட்டுப்பாடு மிக மோசமான நிலையில் உள்ளது. இவ்வாறான சூழலில் தோட்ட மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரண திட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டும்.

இந்தியாவினால் வழங்கப்பட்ட நிவாரணப்பொருட்களும் தோட்ட மக்களுக்கு ஒழுங்கான முறையில் கிடைக்கப்பெறவில்லை. பொதுவாகவே நிவாரணங்கள், உதவி திட்டங்கள் மேற்கொள்ளும் போது மலையக மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது வழமை. அதுவே இந்திய நிவாரண பொருட்களிலும் நடைபெற்றிருக்கின்றது. தொடர்ந்து வரும் நாட்களில் நிலைமை மிக மோசமானதாக காணப்படபோகின்றது. அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கென தனியான நிவாரண திட்டமொன்றை முன்னெடுத்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாத நிலையில் பாராபட்சத்திற்கு மத்தியில் மிக மோசமான பாதிப்பை மலையகத்தின் தோட்ட மக்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். இன்றைய அரசாங்கத்திற்கு எமது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொடுத்தவர்கள் அரசில் இருந்து வெளியேறி விட்டோம் என கூறி தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியாது. இன்றைய அனைத்து நிலைமைகளுக்கும் இவர்கள் பொறுப்பு கூற வேண்டும்-என்றார். (அ)



# எரிபொருள் வரிசையில் நிற்பவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு இசைக்கச்சேரி!

கொழும்பு, ஜூன் 21

எரிபொருள் பற்றாக்குறையால் நீண்ட நேரமாக வரிசையில் காத்திருப்பவர்களை மகிழ்ச்சிப் படுத்த நேற்று முன் தினம் இரவு கெக்கிராவ நகரின் மையப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இசைக் கச்சேரி இடம்பெற்றது.

பல நாட்களாக வரிசையில் காத்திருந்த மக்களை மகிழ்ச்சிப் படுத்த கெக்கிராவைச் சேர்ந்த இசைக்குழுவினால் இந்த கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

# இலங்கை தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு புலம்பெயர் தமிழர் தயாராகவேண்டும்!

## சுவிஸில் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன். 21

**இலங்கை தமிழ் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**



சுவிஸில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாங்கள் ஜனாதிபதியை சந்தித்தபோது அவரிடம் மிக முக்கியமாக சொன்ன விடயம், வடக்கு-கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியை செய்வதற்காக எங்களது புலம் தமிழர்கள் உதவி செய்வார்கள்.

ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம். ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கத்தை காப்பாற்ற நாம் முயற்சிப்பதாகச் சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.

இன்று எங்கள் அரசியலை பொறுத்தவரை, தமிழர்களுக்கு இரண்டு வகையான அரசியல் பிரச்னைகள் காணப்படுகின்றன. முதலாவது எங்கள் கடந்த கால வரலாறுடன் நாங்கள் எவ்வாறு முகங்கொடுப்பது.

அதாவது 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியும், அதற்கு முந்தைய காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விடயம், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் 2009 இற்கு முதல் இருந்தே தொடர்கின்ற விடயங்கள்.

இவற்றில் எதிர் காலத்தில் எங்களுக்கு இருக்கும் விடயங்களை பார்த்தால் அரசியல் தீர்வு என்ற விடயம் எங்களுக்கு மிக மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவற்றை நாம் சமாந்தரமாக கொண்டு செல்லவேண்டும்.

நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியைச் சந்தித்து பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசி வருகின்றோம். குறிப்பாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின்போது நாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளில் இவையும் உள்ளடங்குகின்றன.

பலரும் கேட்கின்றார்கள் குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஏன் சாணக்கியன் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கின்றார் என்று. நாங்கள் குருந்தூர் மலையை சென்று பார்வையிட்டுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ்வாறான விடயங்களைச் செய்து வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள பல பகுதிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எங்கெல்லாம் காணி அபகரிப்பிற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருந்திருக்கின்றேன். அவற்றினை எதிர்த்திருக்கின்றேன். இனினும் இருபபேன்.

எங்களுடைய அரசியல் தீர்வின் ஊடாகவே இவற்றினை மாற்றியமைக்க முடியும்.

எங்களது எதிர்காலம் எப்படியாக இருக்க வேண்டும் என சொன்னால் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும். முஸ்லீம்களிடமிருந்து கிழக்கினை மீட்க வேண்டும் என கூறி பாராளுமன்றம் வருகை தந்த பிள்ளையானும், வியாழேந்திரனும், நஸீர் அஹமட்டுன் இணைந்து தற்போது பணியாற்றுகின்றனர்.

எனவே அரசியல் இலாபங்களுக்காக வாய்களில் வந்த அனைத்தினையும் சொல்லக் கூடாது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும். அப்படி செய்யாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழ் மக்களுக்கும் இருக்காது முஸ்லிம் மக்களுக்கும் இருக்காது-என்றார். (அ)

---

# கோட்டா கோ கம போராட்டத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் ரணில்!

## யாழில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 21

காலிமுகத்திடலில் கோட்டா கோகம போராட்டத்தை பாதுகாப்போம் எனக் கூறிய பிரதமர் இன்று அதனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளாரென மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

சமகால நிலைமை தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்ரமசிங்க பிரச்னையைத் தீர்ப்பதற்காக வரவில்லை. பிரச்னையை வளர்ப்பதற்காகவே வந்துள்ளார்.வரிசை யுகமே தற்போது காணப்படுகிறது. உரம் இல்லாததால் விவசாயத்துறை முழுமையாக செயலிழந்துள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பினாலும் தட்டுப்பாட்டினாலும் மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டத்தை பாதுகாப்போம் எனக் கூறிய பிரதமர் இன்று அதனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கிய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் பிரச்னையைத் தீர்க்க முடியாத உணர்ச்சியற்ற ஜடங்களாக உள்ள கோட்டாபய அரசாங்கத்தை விரட்டியடிக்க இலங்கையில் உள்ள மக்கள் ஓரணியில் திரள வேண்டும்-என்றார். (அ)

---

# இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களை பார்வையிட்டார் சிறிதரன்!

முல்லைத்தீவு, ஜூன். 21

முல்லைத்தீவு, விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான இளைஞர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் நேற்று பார்வையிட்டார்.

இதன்போது இளைஞர்கள் தாங்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாவும் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினருடன் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனும் சென்றிருந்தார். (அ)



---

# இலங்கை - சீனா இடையிலான விமான சேவைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன். 21

இலங்கை - சீனாவிற்கு இடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சீனாவுக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை மூன்றாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

---

# எரிபொருள் இல்லாமையால் சுகாதார சேவைகள் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன். 21

எரிபொருள் இன்மை காரணமாக வருமுன் காப்பு பணியாளர்களான பொது சுகாதார பரிசோதகர்களின் பணியும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள் இன்று தாம் பணிக்கு செல்வதற்காக குஞ்சர்கடை, நெல்லியடி, மந்திகை, கிராமக்கோடு ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்ற போது பெற்றோல் இல்லை என சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களும் கைவிரித்த நிலையில் அனைத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் திரும்பிச் சென்றுள்ளனர்.

அங்கு பெயர் குறிப்பிட விரும்பாத பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் அதனை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய தேவை உள் ளது. மக்கள் பெரிதும் பாதிக்கப் படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது-என்றனர். (அ)

---

# வாக்காளர் பட்டியலில் பெயரை சரி பார்க்குமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன். 21

2022 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைச் சரி பார்க்குமாறு வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

தமது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என்பதை பிரதேச கிராம உத்தியோகத்தர்களிடம் சென்று அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் உறுதிப்படுத்த முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெயர் சேர்க்கப்படா விட்டால், ஜூலை 12ஆம் திகதிக்கு முன்னதாக 011 2 860 034 என்ற எண்ணுக்குத் அறியத் தருமாறு தேர்தல் ஆணைக் குழு கோரியுள்ளது. (அ)

---

# எரிபொருள் நெருக்கடியால் ரயில் சேவைகள் நிறுத்தம்!



கொழும்பு, ஜூன். 21

எரிபொருள் நெருக்கடி காரணமாக புகையிரத சேவைகள் தடைப்பட்டுள்ளதாக ரயில் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ரயில் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் எஸ். பி. விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இதனால் தினமும் 50 முதல் 60 ரயில்கள் ரத்து செய்யப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# கோவிட் சூழலைவிட மோசமான சவாலை எதிர்கொள்ளும் இலங்கைக் கல்வித்துறை!

## கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 21

**ஒட்டுமொத்த கல்வித்துறையும் தீவிரமான மற்றும் சிக்கலான செயன்முறையைக் கடக்க வேண்டியிருப்பதாகவும், கோவிட் சூழ்நிலையைவிட பொருளாதார நெருக்கடியினால் தோன்றியுள்ள நிலையை முகாமைத்துவம் செய்வது சிக்கலாகியுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரத்னசிங்ஹ, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்தார்.**

நாட்டில் நிலவும் தற்போதைய கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் கல்வித் துறையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அண்மையில் கூடியபோதே கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரி வித்தார்.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீடுகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகள் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குறிக்கப்பட்ட நாட்கள் பாடசாலைகளை நடத்த முடியாமல்போனமையால் வரையறுக்கப்பட்ட காலத்தில் பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாமை, தற்பொழுது நிலவும் எரிபொருள் பற்றாக்குறை, பிள்ளைகளின் குடும்பங்களில் காணப்படும் பொருளாதார நெருக்கடி, பெற்றோர் வேலைகளை இழக்கும் நிலை போன்ற மோசமான சூழ்நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிராமங்களில் பல்வேறு சிரமங்கள் இருப்பதாகவும், ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பிப்பது மாணவர்களுக்கு வெற்றிகரமான முறையாக இருக்காது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்பது மற்றுமொரு பிரச்னை என்றும், அரசாங்க ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ள யுனிசெப், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற திட்டங்களின் நிதியை மறுசீரமைக்க முன்னுரிமைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரம் பாடசாலைகள் நடத்தப்படுவதால் முழுமையான பாடநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியாமை பரீட்சையுடன் தொடர்புபட்ட விடயம் என்பதால் பாடத்திட்டத்தின் எல்லையைக் குறைப்பதற்கான அவசியம் குறித்தும் குழு கவனம் செலுத்தியது. இல்லாவிட்டால் மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் கடுமையான அழுத்தங்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

2020 ஆம் ஆண்டில் மாணவர்களின் கற்றல் இழப்பு 54 வீதமாகவும், 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமாகும் போது இந்த எண்ணிக்கை 88 வீதமாகக் காணப்பட்டது என்றும் இங்கு புலப்பட்டது. இவ்வாறான நிலையில், பரீட்சைகளின் போது உரிய கற்றல் இழப்பைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் வினாத்தாள்களைத் தயாரிக்கப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியுள்ளது. தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன ஒருங்கிணைந்து இது தொடர்பில் கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்குமாறு குழு பரிந்துரைத்தது.

தற்போது நிலவும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மாணவர்களை அருகில் உள்ள பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கும் முறை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதனை இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அனைத்து சிரமங்களுக்கு மத்தியிலும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை உரிய முறையில் நடத்தியமைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளையும் குழு பாராட்டியுள்ளது. கோவிட் சூழ்நிலை மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கல்வித் துறையை பராமரிப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அனைத்து ஆசிரியர்கள் உட்பட கல்வி அதிகாரிகளையும் குழு பாராட்டியது.

தற்போதைய கோவிட் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற சிரமங்களை எதிர்கொள்வதால் பிரயோக ரீதியான பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கப்படுவதுடன், ஏனைய விரிவுரைகள் ஒன்லைன் ஊடாக நடத்தப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்படும் 100 மில்லியன் டொலர் திட்டத்தை தற்போது நிலவும் நெருக்கடியின் மத்தியில் நல்ல முறையில் பயன்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு பரிந்துரைத்தது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர,லசந்த அழகியவன்ன, மொஹமட் முஸம்மில், திஸ்ஸ அத்தநாயக்க, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிவஞானம் சிறீதரன், ஹரினி அமரசூரிய, உப்புல் கலப்பதி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# அரிசி விலை குறித்து இரு வாரங்களில் யாழ்ப்பாணத்தில் 41 வழக்குகள் பதிவு!

யாழ்ப்பாணம், ஜுன் 21

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 41 வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் என்.விஜிதரன் தெரிவித்தார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் தற்போது அரிசி கட்டுப்பாட்டு விலை மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டம் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் அரிசி கட்டுப்பாட்டு விலை தொடர்பில் பாரிய பிரச்னை காணப்படுகின்றது.

அமைச்சரவை மட்டத்தில் இதற்கு ஒரு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் இது நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அரிசியை அதிக விலைக்கு விற்றால் அதற்கு அதிக தண்டம் மற்றும் நீதிமன்ற தண்டனை கூட உள்ளது.

மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி சென்றடைய வேண்டும் என்பதற்காக இந்த மாதத்தில் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் எமது அதிகார சபையினர் கடமையாற்றி வருகின்றார்கள்.

குறிப்பாக இந்த மாதத்தில் முதலாம் திகதியிலிருந்து அரிசி சம்பந்தமாக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிலும் கூடுதலாக கட்டுப்பாட்டு விலை என்று பார்க்கும் போது சிறிய கடைகளை நாங்கள் பெரிதாக பரிசோதிப்பதில்லை. மொத்த வியாபார நிலையங்கள், அரிசி ஆலைகளை நாங்கள் பரிசோதித்திருக்கின்றோம். அதனடிப்படையில் பெரும்பாலும் ஆட்டக்காரி, மொட்டைக்கறுப்பன் அரிசி வடக்கு மாகாணத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. அதற்கு விலை நிர்ணயம் இல்லை என்ற வகையில் அதற்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படுவதில்லை.

எனினும் தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் அவ்வாறு எந்த விதமாகவும் குறிப்பிடப்படாதுள்ளதோடு சகல அரிசி வகைக்கும் அது பொருந்தும் என்ற ரீதியில் நாங்கள் சகல அரசியையும் ஒரே விதமாகப் பார்க்கவேண்டியதாகவுள்ளது.

ஆட்டக்காரி அரிசி உற்பத்தியாளர்கள் சரியான விலையை தமது உற்பத்தி பொருளில் காட்சிப்படுத்துவதில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளில் மூன்றுக்கு மேற்பட்ட அரிசி ஆலைகளை பரிசோதித்திருக்கின்றோம். பரிசோதித்து விலை மாற்றம் தொடர்பிலான வழக்குகளை பதிவு செய்திருக்கின்றோம்.

அத்தோடு அவர்களின் அரிசி இருப்பு விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்திருக்கின்றோம்.

விலை மாற்றம் தொடர்பில் 2000 ரூபா விலை பொறிக்கப்பட்ட 10 ஆயிரம் கிலோ அரிசி மூடைகள் காணப்பட்டமையால் விலை மாற்றம் தொடர்பில் மூன்று வழக்குகள் பதிவு செய்திருக்கின்றோம். பதுக்கல் தொடர்பில் ஒரு வழக்கு பதியப்பட்டுள்ளது. அத்தோடு கட்டுப்பாட்டு விலையை மீறியோருக்கு எதிராக 10 பேருக்கு வழக்கு பதிவு செய்திருக்கின்றோம்.

இவை உள்ளடங்களாக அரிசி சம்பந்தமாக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன-என்றார். (அ-03)

# வெளிநாட்டு பிரஜை எரிபொருளைப் பெற முற்பட்டதால் ஹப்புத்தளையில் குழப்பம்!

கொழும்பு, ஜுன் 21

ஹப்புத்தளை நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை முதல் எரிபொருள் விநியோகம் இடம்பெற்ற நிலையில் ரஷ்ய பிரஜை ஒருவர் வாகன நெரிசல் காரணமாக, கொள்கலனில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ள போதிலும், குறித்த சுற்றுலாப் பயணி எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு அங்கு கூடியிருந்தவர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த எரிபொருள் நிலையத்தின் ஊடாக இடம்பெற்ற எரிபொருள் விநியோகம் சில மணி நேரம் நிறுத்தப்பட்டது. பின்னர் பொலிஸார் தலையிட்டு நிலைமையை சீர் செய்தனர். (அ)

# இந்த அரசு இருக்கும்வரை சர்வகட்சி அரசு சரிவராது!

## கோருகிறார் வாசுதேவ

கொழும்பு, ஜுன் 21

தற்போதைய அரசாங்கம் இருக்கும் வரை சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



தற்போதைய பிரதமர் பதவியில் இருந்து விலகி அனைத்து கட்சி அரசாங்கத்துக்கு புதிய பிரதமரை நியமிக்கவேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (அ)

# கட்டாய ராணுவ சேவை திட்டம்: எந்தெந்த நாடுகளில் உள்ளது?

இந்திய ராணுவத்தில் குறுகிய கால பணி நியமனங்களுக்கான திட்டம் கடந்த 14ம் திகதி வெளியிடப்பட்டது. இந்த திட்டத்திற்கு இந்திய மத்திய அரசு “அக்னிபத் யோஜ்னா” என பெயரிட்டுள்ளது. இந்த திட்டத்தின் படி, அக்னி வீரர்கள் என்று அழைக்கப்படும் இளைஞர்கள் நான்கு ஆண்டுகளுக்கு ராணுவத்தில் பணிக்கு சேர்வார்கள்.

இந்த திட்டத்தின்கீழ் பணியமர்த்தப்பட்ட இளைஞர்களில், 25 சதவீதப் பேருக்கு நான்கு ஆண்டுகள் கழித்து இந்திய ராணுவத்தில் மேலும் பணி செய்ய வாய்ப்பு கிடைக்கும். மீதமுள்ளவர்கள் வேலையை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.



இந்த அக்னிபத் திட்டம் அறிவிக்கப்பட்டது முதல், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியாவின் பல்வேறு இடங்களில் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல மாநிலங்களில் கல்வீச்சு, தீ வைப்பு சம்பவங்களும் நடந்தன. இந்தியாவில் முதன்முறையாக ராணுவத்தில் இளைஞர்கள் குறுகிய காலத்திற்குப் பணியமர்த்தப்படவுள்ளனர்.

ராணுவத்தில் இத்தகைய ஆட்சேர்ப்பு வெளிநாடுகளிலும் நடந்து வருவதாக மத்திய அரசு கூறுகிறது. இந்தியாவைப் போலவே, உலகில் பல்வேறு நாடுகளில் குறுகிய காலத்திற்கு ராணுவத்தில் ஆட்சேர்ப்பு என்பது உள்ளது. இத்தகைய நாடுகளில் ராணுவத்திற்கு சேவை செய்வது கட்டாயம் என்பது இங்கே கவனிக்க வேண்டிய ஒன்று. இத்தகைய நாடுகளில், இதற்காக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அக்னிபத் திட்டம் இவற்றைப் போன்றது அல்ல.

ராணுவத்திற்கு சேவை செய்வதை கட்டாயமாக்கியிருக்கும் நாடுகள் எவை, அதன் விதிமுறைகள் என்ன என்பதைப் பார்க்கலாம்.



**இஸ்ரேல்**

இஸ்ரேல் நாட்டில் ராணுவத்தில் சேவை செய்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகும். இஸ்ரேலிய பாதுகாப்புப் படையில் ஆண்கள் மூன்று ஆண்டுகளும் பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இஸ்ரேலிய குடிமக்களுக்கு இது பொருந்தும்.

புதிதாகக் குடியேறியவர்களுக்கும், சில மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மருத்துவ அடிப்படையில் இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். கூடுதலாக, சில சிறப்பு விதிகளின் அடிப்படையில், விளையாட்டு வீரர்கள் குறுகிய காலத்திற்கு சேவை செய்யலாம்.

**தென் கொரியா**

தேசிய ராணுவ சேவைக்கான மிகவும் வலுவான அமைப்பைக் கொண்டுள்ளது தென் கொரியா. உடற் தகுதியுடைய ஆண்கள் அனைவரும் ராணுவத்தில் 21 மாதங்களும், கடற்படையில் 23 மாதங்களும், விமானப்படையில் 24 மாதங்களும் பணியாற்றுவது கட்டாயமாகும்.

இது தவிர, தென் கொரியாவில் காவல்துறை, கடலோர காவற்படை, தீயணைப்பு சேவை மற்றும் சில சிறப்பு விதிகளில், அரசு துறைகளில் பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது. ஆனால், ஒலிம்பிக் அல்லது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ராணுவத்தில் கட்டாயமாகப் பணியாற்றுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இப்போட்டிகளில் பதக்கம் வெல்ல முடியாத வீரர்கள் மீண்டும் வந்து ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

**வட கொரியா**

கட்டாய ராணுவ சேவையை நீண்ட காலமாக கொண்டுள்ள நாடு வட கொரியா. இந்த நாட்டில் ஆண்கள் 11 ஆண்டுகளும், பெண்கள் ஏழு ஆண்டுகளும் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

**எரித்திரியா**

ஆப்ரிக்க நாடான எரித்திரியாவிலும் ராணுவத்தில் கட்டாயம் சேவை செய்ய வேண்டும் என்ற சட்டம் உள்ளது. இந்த நாட்டில் ஆண்கள், இளைஞர்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் 18 மாதங்கள் நாட்டின் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

மனித உரிமை அமைப்புகளின் கூற்றுப்படி, எரித்திரியாவில் இந்த 18 மாத சேவை சில ஆண்டுகளும் நீட்டிக்கப்படுகிறது. சில நேரங்களில் அது காலவரையின்றி செய்யப்படுகிறது. எரித்திரியாவில் இதுபோன்ற முடிவால் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். ராணுவத்தில் கட்டாய சேவை செய்ய விரும்பாத பலர் பிரிட்டனில் தஞ்சம் அடைய கோருவதுண்டு.

**சுவிட்சர்லாந்து**

சுவிட்சர்லாந்தில் 18 வயது முதல் 34 வயது வரையுள்ள ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இந்த சட்டத்தை கடந்த 2013ம் ஆண்டு, சுவிட்சர்லாந்து வாக் கெடுப்பின் மூலம் முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்யப்பட்டது.

2013ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக இந்த விவகாரம் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. சுவிட்சர்லாந்தில் கட்டாய சேவை 21 வாரங்கள் வரை நீடிக்கும். அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் கூடுதல் பயிற்சி அளிக்கப்படும். அந்நாட்டு பெண்களுக்கு ராணுவத்தில் கட் டாயம் சேர வேண்டும் என்ற விதி இல்லை. ஆனால் அவர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் ராணுவத்தில் சேரலாம்.

**பிரேசில்**

பிரேசிலில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயம். இந்த கட்டாய ராணுவச் சேவை 10 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். உடல்நலம் போன்ற காரணங்களுக்காக, ராணுவத்தில் கட்டாயமாக பணியாற்றும் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம். ஒரு இளைஞர் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தால், சிறிது காலத்திற்குப் பிறகு அவர் ராணு வத்தில் கட்டாய சேவைக்கு செல்ல வேண்டியிருக்கும்.

இந்த நாட்டில், படைவீரர்களுக்கு இதற்கு சிறிய சம்பளம், உணவு மற்றும் படைமுகாமில் தங்குவதற்கான வசதிகள் கிடைக்கும்.

**சிரியா**

சிரியாவிலும் ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயம். மார்ச் 2011 ஆம் ஆண்டு, அந்நாட்டு அதிபர் பஷர் அல்-அசாத் கட்டாய ராணுவ சேவைக்கான கால அளவை 21 மாதங்களில் இருந்து 18 மாதங்களாக குறைக்க முடிவு செய்தார்.

அரசுப் பணிகளில் இருப்பவர்கள், கட்டாய ராணுவப் பணியைச் செய்யாவிட்டால், அவர்களின் வேலை பறிக்கப்படும். கட்டாய ராணுவ சேவையில் இருந்து தப்பிப்பவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என அம்னெஸ்டி இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

**ஜார்ஜியா**

ஜார்ஜியாவில் ஒரு வருட ராணுவ சேவை கட்டாயமாகும். இதில், மூன்று மாதங்கள் போர் பயிற்சி அளிக்கப்படுகிறது. மீதமுள்ள 9 மாதங்கள் தொழில்முறை ராணுவத்திற்கு உதவும் அதிகாரியாக பணியாற்ற வேண்டும். ஜார்ஜியா கட்டாய ராணுவ சேவையை நிறுத்தியது. ஆனால், அதற்கு 8 மாதங்களுக்குப் பிறகு, 2017ம் ஆண்டு அதை மீண்டும் தொடங்கியது.

**லிதுவேனியா**

லிதுவேனியாவில் கட்டாய ராணுவ சேவை 2008ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. 2016ம் ஆண்டில் , லிதுவேனியா அரசு அதை ஐந்து ஆண்டுகளுக்கு மீண்டும் தொடங்கியது. அதிகரித்து வரும் ரஷ்ய ராணுவ அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்தது. ஆனால் 2016ல் மீண்டும் இந்த முறை தொடங்கப்பட்டது. இங்கு 18 முதல் 26 வயதுக்குட்பட்ட ஆண்கள் கட்டாயமாக ஒரு வருடம் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும். இதில், பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்கள் மற்றும் ஒற்றை தந்தையர்களுக்கு இந்த விதியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2016ம் ஆண்டு இதனை நடைமுறைப்படுத்தியதன் மூலம் ஆண்டுத்தோறும் நடக்கும் பணியில் 3500 பேர் சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அந்நாடு அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

**ஸ்வீடன்**

100 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்வீடன் நாடு 2010ம் ஆண்டு கட்டாய ராணுவ சேவையை ரத்து செய்தது. 2017 ஆம் ஆண்டில், அதை மீண்டும் தொடங்குவதற்கு வாக்களிக்கப்பட்டது. இந்த முடிவிற்குப் பிறகு, ஜனவரி 2018 முதல் ஆண்கள், பெண்கள் என 4000 பேரை கட்டாய ராணுவ சேவைக்கு அழைக்க முடிவு செய்யப்பட்டது. ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் கூற்றுப்படி, 2025ம் ஆண்டுக்குள் 8 ஆயிரம் ஆண்கள் மற்றும் பெண்கள் கட்டாய ராணுவ சேவையில் சேர்க்கப்படுவார்கள்.



மேலும், 20 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண் களுக்கும் துருக்கியில் ராணுவ சேவை கட்டாயமாகும். அவர் கள் 6 முதல் 15 மாதங்கள் வரை ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

கீரிஸில், 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு 9 மாதங்கள் ராணுவப் பணி கட்டாயம்.

இது தவிர, ஈரானில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 24 மாதங்கள் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

கியூபாவில், 17 முதல் 28 வயதுடைய ஆண்கள் இரண்டு ஆண்டுகள் கட்டாய ராணுவ சேவையில் பணியாற்ற வேண்டும்.

# கோட்டா கோ கமவில் என்ன நடக்கிறது?

## மனம் திறக்கின்றனர் செயற்பாட்டாளர்கள்!



சமூக செயற்பாட்டாளர்களான அஞ்சலி வந்துரகல மற்றும் மெலனி குணதிலக்க ஆகியோர் "அரகலய" புறநகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் அங்கமாக இருந்து வருகின்றனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் காலிமுகத்திடலில் உள்ள "கோட்டா கோ கம"வில் இருக்கிறார்கள், நிலைமையைக் கண்காணித்து, தேவைப்படும்போது கைகொடுக்கிறார்கள். அஞ்சலிக்கு 22 வயது, பொருளாதாரம் படித்து வருகிறார், 35 வயதான மெலனி, நிலைத்தன்மை துறையில் பணிபுரியும் கால நிலை ஆர்வலர். அரகலயா என்றால் என்ன, அது இது வரை என்ன சாதித்துள்ளது, அது எங்கு செல்கிறது மற்றும் அவர்களின் செயல்பாடு குறித்து அவர்களது குடும்பத்தினர் என்ன நினைக்கிறார்கள் என்று அவர்கள் இருவரும் பேசினர்.

**ஜனாதிபதி ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தை முடிப்பதாகக் கூறியிருக்கிறார், நீங்கள் என்ன செய்வீர்கள்?**

அவர் போகும் வரை பொறுத்திருப்பதில் உறுதியாக இருக்கி றோம். மகிந்த போக மாட்டேன் என்றார் ஆனால் சென்றார். தோல்வியுற்ற ஜனாதிபதியாக இருந்து வெளியேற முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார், ஆனால் ஒரு வயதான மனிதனின் ஈகோ திருப்தி அடைவதால் தலைமுறைகள் தங்கள் வாழ்க்கையை வீணடிக்க வேண்டுமா? மக்கள் வரிசையில் நின்று மருந்து கிடைக்காமல் இறக்கின்றனர். ஒரு தலைவர் தனது மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.



**அரகலய இதுவரை என்ன சாதித்தது என்று நினைக்கிறீர்கள்?**

நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தியது மிகப்பெரிய அம்சம். அவர்கள் வாழ்நாள் முழுவதும் போராடியதை நாங்கள் சாதித்துவிட்டோம் என்று வயதானவர்கள் சொல்கிறார்கள். அனைத்து மதத்தினரின் பண்டிகைகளையும் ஒற்றுமையுடன் கொண்டாடினோம். ஊழல் தலைவர்கள் பயம் மற்றும் வேறுபாடுகளைப் பயன்படுத்தி எங்களைப் பிரித்து வைத்திருப்பதை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனால் எந்த வேறுபாடுகளையும் தாண்டி நாம் ஒன்றுபடலாம்.

வக்கீல்கள் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முன்வருகிறார்கள். மத்திய வங்கி பணம் அச்சிடுவதை நிறுத்திவிட்டு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டார். கோட்டா கோ கமவின் அழுத்தம் காரணமாக ஆடாவடியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநீதிக்கு எதிராக போராடும் சக்தி தங்களுக்கு இருப்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். வடக்கில் இருந்து முழுமையான பங்கேற்பு இல்லாவிட்டாலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் தோட்டத் தொழிலாளர்களும் எம்முடன் இணைந்துள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முதன்முறையாக கொழும்பில் நடைபெற்றது. யார் வேண்டுமானாலும் இங்கு வந்து தங்கள் கவலைகளை தெரிவிக்கலாம்.

முன்னதாக, பொதுமக்கள் இந்த பிரச்சினைகளை குறுகிய கண்ணோட்டத்தில் பார்த்தார்கள், ஆனால் இப்போது சமூக ஊடகங்களில், பலவிதமான பார்வைகள் வெளிவருகின்றன. நாங்கள் புரிந்து கொள்ளவும், பச்சாதாபம் கொள்ளவும், பதில்களைக் கண்டறியவும் விரும்புகிறோம். கருத்துகளை மாற்ற இடம் உள்ளது. கல்வி மற்றும் விழிப்புணர்வு நடக்கிறது.

**எதிர்ப்புகளை நீண்ட காலத்திற்கு எப்படித் தாங்குவது?**

முன்பு பெரும் கூட்டம் இருந்தது. ஆனால் எந்தச் செயலிலும் வளர்ச்சியும் முட்டுக்கட்டையும் உள்ளது. மே 9 க்குப் பிறகு ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது, ஏனெனில் மக்கள் அச்சமடைந்தனர். அதுவரை இது பாதுகாப்பான இடமாக இருந்தது. இது அனைவருக்கும் ஒரு அதிர்ச்சிகரமான நிகழ்வு, எங்களுக்கு ஒரு தண்ணீர் போத்தல் நன்கொடையாக வழங்கிய ஒருவர் கூட அதை உணர்ந்தார்.

பயம் அவர்களின் ஆயுதம். அனைத்து தரப்பிலிருந்தும் அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகிறது. மேலும் மக்கள் வேலைக்குச் சென்று வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளது. அவர்களிடம் பணம் இல்லை, போக்குவரத்து வசதி இல்லை. நேரடியாக இங்கு வர முடியாவிட்டாலும் பலர் எங்களுடன் தொடர்பில் உள்ளனர். வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் எங்களுக்கு என்ன தேவை என்று கேட்கிறார்கள். ஊரடங்கு உத்தரவின் போது மக்கள் உணவு மற்றும் தண்ணீரை uber மற்றும் pickme மூலம் அனுப்பினர். வன்முறையற்ற எதிர்ப்பை நம்பும் மக்களுக்கு அவர்கள் அன்பையும் அமைதியையும் தருகிறார்கள் மற்றும் அவர்களின் நிலைப்பாட்டில் நிற்கிறார்கள். உங்கள் வீட்டிற்கு வெளியே கருப்புக் கொடியை ஏற்றியோ அல்லது சுவரொட்டியை வைத்தோ கூட உங்கள் எதிர்ப்பைக் காட்டலாம். எதிர்ப்புகளை முடிந்தவரை அமைதியான முறையில் காட்ட சிறிய எதிர்ப்புகளுடன் போராட்டம் மீண்டும் ஒளிரலாம். எங்களுக்கு ஒரு பொதுவான, கூட்டு இலக்கு உள்ளது. அதை நிலைநிறுத்த முடியும்.

**கண்ணுக்குத் தெரியும் தலைவர்கள் இல்லாமல் தொடர முடியுமா?**

ஒரு தலைவரின் முகம் இல்லாமல் முன்னேற வாய்ப்பு உள்ளது. பல்வேறு குழுக்கள் அரசாங்கத்துடன் ஈடுபட்டு பத்திரிகைச் செய்திகளை வெளியிடுகின்றன, ஆனால் அவை அரகலயத்தைச் சேர்ந்தவை அல்ல. எங்களிடம் எங்கள் முக்கிய மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் தொகுப்பு உள்ளது, எனவே எங்களுக்கு ஒரு தலைவர் இல்லை, ஒருவர் தேவையில்லை. ஊழல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லாமல் நாங்கள் வன்முறையற்றவர்கள். ஒவ்வொருவரும் பொறுப்பையும் உரிமையையும் எடுத்துக் கொள்கிறார்கள். நிச்சயமாக, எங்களிடம் வெவ்வேறு தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் கருத்தியல் வேறுபாடுகள் உள்ளன, ஆனால் ஒரு பொதுவான குறிக்கோள் உள்ளது.



**அரகலயக்குள் ஜே.வி.பி ஊடுருவியதா?**

அரசியல் கட்சிகள் இங்கு இல்லை. ஆனால் ஆரம்பத்தில் இருந்தே இடதுசாரி அரசியல் கட்சிகளுடன் இணைந்த மாணவர் குழுக்கள் உள்ளன. அவர்கள் கருத்தியல் வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர், ஆனால் சமூக அநீதி மற்றும் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கான பொதுவான இலக்கை ஆதரிக்கின்றனர். முக்கியமாக அவர்களுக்கும் மற்ற சுயேச்சையான, கட்சி சார்பற்ற எதிர்ப்பாளர்களுக்கும் இடையே உள்ள கருத்தியல் வேறுபாடுகள் காரணமாக அரகலயவில் அவர்கள் ஆதிக்கம் செலுத்துவது சாத்தியமில்லை.

ஊழலை ஆதரிக்கும் தற்போதைய அதிகார அரசியலை நிராகரிக்கும் குடிமக்கள் எவரும் வந்து கலந்துகொண்டு தங்கள் குரலைக் கேட்கச் செய்ய வேண்டும், ஏனென்றால் அரகல எந்த ஒரு மக்களுக்கும் சொந்தமானது அல்ல.

**போதைப்பொருள் பயன்பாடு, பாலியல் செயல்பாடு மற்றும் ஒற்றுமையின்மை பற்றிய அறிக்கைகள் உள்ளன. அவை சரிதானா?**

இயக்கத்தை இழிவுபடுத் தவும் கலைக்கவும் பல முயற்சிகள் உள்ளன. இந்தக் கதைகள் ஆரம்பத்திலி ருந்தே உண்டு. அரகலயவையும் அங்குள்ள போராட் டக்காரர்களையும் பேய்த்தனமாகப் பார்ப்பதற்குப் பதிலாக, நம் சமூகத்தில் இருக்கும் பெரிய சமூக மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளுக்கு மக்கள் தீர்வு காண வேண்டும்.

**போராட்டக்காரர்களின் நலனைக் காண பிரதமர் ஒரு குழுவை நியமித்தார். இது நடந்ததா?**

யாரும் எங்களுக்கு உதவவில்லை. ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது இலக்கு அல்ல என்பதை காட்டி எம்மை நடுநிலையாக்கும் முயற்சியே இது. இவை இயக்கத்தை நீர்த்துப்போகச் செய்யும் சூழ்ச்சிகள். ஆனால் நாம் அதை விட மிகவும் வலிமையானவர்கள். இவ்வளவு நாள் மௌனமாக இருந்து அலுத்துவிட்டோம், பிரச்னைகள் தீர்க்கப்படாததால் வெளியில் வருவோம்.

**மக்களுக்கு மீண்டும் அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்பட்டால், அவர்கள் மாற்றத்தை மறந்துவிடுவார்களா?**

உயர் நடுத்தர மற்றும் நகர மக்கள் தங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவில்லை, ஆனால் குறைந்த சலுகை பெற்ற சமூகங்கள் நீண்ட காலமாக எரிவாயு சிலிண்டர் வாங்க முடியாததால் போராட்டத்தில் ஈடுபட்டனர். சமூகத்தின் ஒரு பகுதியினர் விரும்பியதைப் பெற்றாலும், எங்கள் இயக்கம் அழியாது, ஏனென்றால் நாங்கள் ஒரு பெரிய நோக்கத்திற்காக போராடுகிறோம். எந்தவொரு குறுகிய கால தீர்வுகளும் நிலையானவை அல்ல. நம் அனைவருக்கும் வீடுகள் மற்றும் வேலைகள் உள்ளன, அங்கு நாம் உரையாடலாம் மற்றும் நாம் தொடர்பு கொள்ளும் நபர்களை பாதிக்கலாம். வசதி படைத்தவர்கள் கூட வெளியே வந்து உதவுகிறார்கள் பல்கலைக்கழக இடைவேளையில் இருந்து வீடு திரும்பிய மாணவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள இலங்கை மாணவர்கள் எங்களுடன் இணைந்துள்ளனர்.

**அரசியல் கட்சியாக மாறுவீர்களா?**

ஒரு அரசியல் கட்சியை விட சுறுசுறுப்பான குடிமக்கள் மிகப் பெரிய பங்கை வகிக்க முடியும். தற்போதுள்ள கட்சிகள் தங்களுக்குள் அதிகாரத்தை மாற்றிக் கொள்கின்றன. நெருக்கடியான காலங்களில் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் ஒன்றிணைந்துள்ளனர். முறை யான கொள்கைகளைக் கொண்ட திறமையுள்ள சரியான நபர்கள் தேவை. நாங்கள் விரும்புவது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் அமைப்பு மற்றும் சிறப்பு சலுகைகள் பெறாத குற்ற வரலாறு இல்லாத தலைவர்கள். அரசியலமைப்பின் மூலம் மாற்றத்தையும் நீதியையும் நாங்கள் விரும்புகிறோம்.

**(கிரவுண்ட் நியூஸ்)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

Kalvi tv CHANNEL

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................. (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் ................................................ (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : ................................................ (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ...................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ......................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** | 7 | 8 | 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

Kalvi tv CHANNEL-1

**21.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

Kalvi tv CHANNEL - 2

**21.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இரண்டு குழுக்களிடையே மோதல் 5 சிறுவர்கள் மருத்துவமனையில்!

திருகோணமலை, ஜூன் 21

இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட சண்டையில் ஐவர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். இந்தச் சம்பவத் தில் 16 வயதுக்கு உட்பட்ட 3 சிறுவர்கள் மீது மிளகாய்த்தூள் வீசியும் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

திருகோணமலை-ரொட்ட வெவை மிரிஸ்வெவையில் நேற்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கடந்த 3 நாட்களுக்கு முன் னர் ஏற்பட்ட கை கலப்புடன் தொடர்புடைய குறித்த இரு குழுக்களிடையே தொடர்ந்தும் முறுகல் நீடித்து வந்துள்ளது. இந்தநிலையில் கடைக்குச் சென்ற சிறுவனை அடித்தது டன், மிளகாய் தூள் வீசியும் தாக்கியுள்ளனர் என்று கூறப் படுகின்றது. இதைத் தொடர்ந்து இடம்பெற்ற சண்டையில் 3 சிறுவர்கள் மஹதிவுல்வெவை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், மற்றக் குழுவை சேர்ந்த இரு சிறுவர்களும் காய மடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், மிளகாய் வீச்சு தாக்குதலுக்கு இலக்கான மூன்று சிறுவர்களும் மேலதிக சிகிச்சைக் காக திருகோணமலை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# விநாயகர் கண்ணகி ஆலயத்தில் மண்டலாபிஷேகம் நடைபெற்றது

மட்டக்களப்பு, ஜூன் 21

கிழக்கிலங்கையின் மட்டக் களப்பு ,மண்டூர் கணேசபுரம் ஸ்ரீவிநாயகர் கண்ணகியம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகத் தின் மண்டலாபிஷேக பூர்த் தியை முன்னிட்டு பால்குட பவனியும் சங்காபிஷேகமும் நடைபெற்றது.

பக்தர்கள் புடைசூழ விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற் றதுடன் தொடர்ந்து பால் குட பவனி சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பெண் கள் தலையில் பால்குடங்களை சுமந்தவண்ணம் அரோகரா கோஷத்துடன் ஆலயத்தை சென்றடைந்தனர். இதனை தொடர்ந்து ஆலயத்தில் மூலமூர்த் தியாகிய விநாயகருக்கு பாலா பிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மயூரவதன் குருக் கள் தலைமையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த 03-06-2022அன்று அருள்மிகு ஸ்ரீவிநாயகர் கண்ணகியம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷே கம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிசேகம் நடைபெற் றதை தொடர்ந்து பூர்த்தி நிகழ்வு நடைபெற்றது. (ஐ)





### எரிபொருள் வழங்குமாறு கோரி

# மட்டு. போதனா மருத்துவமனையினர் கச்சேரியை முற்றுகையிட்டு போராட்டம்!

**மட்டக்களப்பு, ஜூன் 21**

**மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யில் கடமையாற்றுவோர் எரிபொருள் வழங்கு மாறு கோரி மாவட்ட செயலகத்தை முற்று கையிட்டு நேற்று திங்கட்கிழமை போராட்டம் நடத்தினர்.**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமை யாற்றும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார துறை ஊழியர்கள் என பல தரப்பினர் இந்தப் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று திங்கட்கிழமை மதிய உணவு நேரத்தில் போதனா வைத்தியசாலை முன்பாக ஒன்று கூடியவர்கள், அங்கிருந்து கோவிந்தன் வீதியூடாக மட்டக் களப்பு நகரை அடைந்து மட் டக்களப்பு நகர் ஊடாக மட் டக்களப்பு மாவட்ட செயலகம் வரை பேரணியாக சென்றனர்.

தொடர்ந்து அங்கு அவர்கள் மாவட்ட செயலகத்தை முற் றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். ஐந்து பிரதி நிதிகளை அழைத்து மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பேச்சு நடத்தினார்.

இதன்போது மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் கடமையாற்றுவோருக்கு எரி பொருளைப் பெறுவதற்கு ஒரு தினத்தை ஓர் எரிபொருள் நிலையத்தில் ஏற்பாடு செய்வ தாக அளிக்கப்பட்ட உறுதி மொழியை அடுத்துப் போராட் டம் நிறைவடைந்தது.

எனினும், தாங்கள் தொடர்ச் சியாக கோரிக்கையை முன்வைத் துவந்தபோதிலும் மாவட்ட நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளாமல் செயல்பட்டு வந்ததாக இதன்போது மருத்து வமனை ஆளணியினர் குற்றஞ் சாட்டினர்.

அத்தியாவசிய தேவையாக கருதப்படும் சுகாதார சேவை யில் ஈடுபட்டு வருவோர் வந்து செல்வதற்கான எரிபொருள் மிக அத்தியாவசியமானது என வும் அவ்வாறு எரிபொருள் வழங் காவிட்டால் வைத்தியசாலையில் நோயாளர்களை பராமரிப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்படும் என்றும் மருத்துவர் மதனழகன் இதன்போது தெரிவித்திருந் தார். (ஐ)

# கல்முனையில் ஆசிரியர்கள் எரிபொருள் கோரி போராட்டம்!

கல்முனை, ஜூன் 21

எரிபொருள் பிரச்னைக்கு தீர்வு வழங்குமாறு கோரி ஆசி ரியர்கள் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் முன்னெ டுத்தனர்.

நாட்டில் தற்போது ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி கல்வி சேவையில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டியும் சம்பந் தப்பட்டவர்கள் உடனடி நட வடிக்கை எடுக்குமாறும் கோரியே சாதாரண தரப் பரீட்சை மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் இந்தப் போராட் டத்தை முன்னெடுத்தனர்.



இதன்போது அவர்கள், “வரிசையில் நிற்போரே உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை சிந்தியுங்கள்”, “எரிபொருள் இல்லாமல் கடமையை தொடர முடியாது”, “கொழும்பு பாட சாலைக்கு மட்டுமா எரிபொ ருள் பிரச்னை” போன்ற வாசகங் கள் எழுதப்பட்ட பதாகைக ளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் இந்த போராட் டம் கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலை முன்பாக ஆரம் பமாகி பிர தான வீதி வழி யாக கல்முனை தலைமை யக பொலிஸ் நிலையத் தில் நிறைவடைந்தது.

இதன்போது, ஆசிரியர் கள் அப்பகுதியிலுள்ள எரி பொருள் விற்பனை நிலை யம் முன்பாகவும் கவன வீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)



# எரிபொருளுக்காக வரிசை; ஸ்தம்பித்தது சாய்ந்தமருது

அக்கரைப்பற்று, ஜூன் 21

அம்பாறை - சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையத் தில் நேற்று காலை முதல் பல் வேறு குழப்ப நிலைக்கு மத் தியில் எரிபொருள் வழங்கப் பட்டது. இதனால், ஏற்பட்ட நீண்டவரிசையால் வாகனங்கள் வீதியால் பயணிக்க முடியாது போக்குவரத்து தடைப்பட்டது.

சாய்ந்தமருது ஆரம்பிக்கும் ஸாஹிரா கல்லூரி சந்தி முதல் முடிவடையும் மாளிகா சந்தி வரை மோட்டார் சைக்கிள் மற் றும் முச்சக்கர வண்டிகள், கார் கள் போன்ற வாகனங்களில் நேற்று அதிகாலை முதல் பொதுமக்கள், சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், முன்கள பணியாளர்கள் என பலர் காத்தி ருந்தனர்.

இதனால், அவசரநோயாளர் களை ஏற்றிச் செல்லும் அம்பு லன்ஸ் வண்டிகள் உட்பட அவசர முன்களப்பணி செய்யும் அரச திணைக்கள வாகனங்கள், பொதுமக்கள் எனப்பலரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி யிருந்தன.

எனினும், சில மணி நேரப் போராட்டத்தின் பின்னரே வாகன நெரிசலை கட்டுப்ப டுத்தி போக்குவரத்து முழுமை யாக சீரமைக்கப்பட்டது. (ஐ)

# கல்முனை சுகாதார பிரிவில் மரவள்ளி பயிர் செயல்திட்டம்



கல்முனை, ஜூன் 21

நாட்டின் தற்போது நிலவும் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மருத்துவ நிலையங்களில் மரவள்ளி நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இதற்காக மரவள்ளித் தடிகளை வழங்கும் ஆரம்ப நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பளார் விடுத்த கோரிக்கைக்கு அமைய 500 மரவள்ளித் தடிகள் வழங்கப்பட்டன.

இந்த மரவள்ளித் தடிகள் மருத்துவமனைகளுக்கும் சுகாதார மருத்துவ நிலையங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு





## வாஷிங்டனில் துப்பாக்கி சூடு; சிறுவன் பலி; மூவர் படுகாயம்!

வாஷிங்டன், ஜுன் 21

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் டி.சியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 15 வயதுச் சிறுவன் கொல்லப்பட்டார். பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 3 பேர் காயமடைந்தனர்.

உணவகங்கள் மற்றும் மதுபான விடுதிகள் நிறைந்த ஒரு பிரபலமான பகுதியில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டில் இறந்த 15 வயது சிறுவன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், காயமடைந்த மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் வாஷிங்டன் டி.சி. பெருநகர பொலிஸார் தெரிவித்தனர்.

இலவச "மோசெல்லா" இசைக்கச்சேரி நேற்று முன்தினம் இரவு இந்தப் பகுதியில் நடத்தப்பட்டது. கச்சேரியில் தனிப்பட்ட நபர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து இசைநிகழ்வில் கூடியிருந்த மக்கள் சிதறி ஓடினர். கச்சேரி உடனடியாக நிறுத்தப்பட்டது. (ஐ)



## அக்னி பாதை திட்டத்தை எதிர்த்து இந்தியா முழுவதும் போராட்டம்!

புதுடில்லி, ஜுன் 21

அக்னிபாதை திட்டத்துக்கு எதிராக நாடு தழுவிய பாரத் முழு அடைப்பு போராட்டம் காரணமாக சில மாநிலங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் 500 ரயில்கள் நேற்று நிறுத்தப்பட்டன. வன்முறைகளை கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் முப்படைகளில் 4 ஆண்டு சேவையாற்றும் 'அக்னிபாதை' திட்டத்தை இந்திய மத்திய அரசு அறிவித்தது. இந்த திட்டத்துக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது. திட்டத்தைக் கைவிடக் கோரி பீஹார் உட்பட பல்வேறு மாநிலங்களில் இளைஞர்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். ரயில்கள் எரிப்பு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களும் நடந்துள்ளன.

இந்நிலையில் நேற்று, அக்னிபாதை திட்டத்துக்கு எதிராக பல்வேறு அமைப்புகள் சார்பில் நேற்று பாரத் பந்த் எனப்படும் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இதன்படி நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இந்தியா முழுவதும் 500 ரயில்களை மத்திய ரயில்வே நிர்வாகம் இரத்து செய்துள்ளது.

ரயில்கள் நிறுத்தப்பட்டமையால் டில்லியின் சில பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டன.

### போரால் உக்ரைனில் தேங்கிய

# 2 கோடி தொன் தானியங்களை விடுவிக்க நடவடிக்கை!

லக்சம்பேர்க், ஜுன் 21

உக்ரேனிய துறைமுகங்களை ரஷ்யா முற்றுகையிட்டுள்ளதால் தேங்கியுள்ள சுமார் 2 கோடி தொன் தானியங்களை விடுவிப்பதற்கான வழிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் லக்சம்பேர்க்கில் நேற்று விவாதித்தனர்.

உலகுக்கு கோதுமை விநியோகம் செய்யும் நாடுகளில் உக்ரைன் முன்னணியில் உள்ளது. ஆனால், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை அடுத்து அதன் தானிய ஏற்றுமதி முடங்கியது. உக்ரேனிய துறைமுகங்களை ரஷ்யா முடக்கியுள்ளதால் 2 கோடி தொன்களுக்கும் அதிகமான தானியங்கள் தேங்கியுள்ளன.

இவ்வாறு தானிய ஏற்றுமதியை முடக்கியுள்ளதன் மூலம் செயற்கை உணவு நெருக்கடியை ரஷ்யா ஏற்படுத்தி வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா மறுத்து வருகிறது.

உலகளாவிய உணவு, எரிபொருள் பற்றாக்குறைக்கு ரஷ்யா மீதான மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளே காரணம் என ரஷ்யா குற்றஞ்சாட்டுகிறது.

இதேவேளை, உலகெங்கும் உணவு விலைகள் அதிகரிப்பதுடன், உணவு உற்பத்தி, ஏற்றுமதி குறைந்து வருவதால் இறக்குமதி தானியங்களை பெரிதும் நம்பியிருக்கும் ஏழை நாடுகளில் பட்டினி ஆபத்தை எதிர்கொள்ள நேரிடுவதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ரஷ்ய உணவு மற்றும் உர ஏற்றுமதியை எளிதாக்கும் அதேநேரம் உக்ரைனின் கடல் மார்க்கமான ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தை எட்ட ஐக்கிய நாடுகள் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஐ. நாவின் இந்த முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும், இந்த முயற்சிக்கு ரஷ்யா உடன்படுமா? என்பது தெரியவில்லை.

இதனிடையே, உக்ரைன் மற்றும் ரஷ்யா இரு நாடுகளுடனும் நல்லுறவைக் கொண்டுள்ள துருக்கி, ரஷ்ய உணவு மற்றும் உர ஏற்றுமதியை எளிதாக்கும் அதேநேரம் உக்ரைனின் கடல் மார்க்கமான ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவ தற்கான ஒப்பந்தத்தை கண்காணிப் பதற்கான பொறிமுறையில் பங்கேற்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித் துள்ளது. (ஐ)



## முன்னாள் கெரில்லா போராளி கொலம்பிய ஜனாதிபதியானார்

பொகோடா, ஜுன் 21

கொலம்பியாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரியான முன்னாள் கெரில்லா போராளியான குஸ்டாவோ பெட்ரோ ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

இதன்மூலம், தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் ஜனாதிபதியாக பொறுப்பேற்கும் முதல் இடதுசாரித் தலைவராக குஸ்டாவோ பெட்ரோ சாதனை படைத்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் 50.47 வீத வாக்குகளைப் பெற்று, புகாரமங்காவின் முன்னாள் மேயர் ரோடோல்போ ஹெர்னாண்டஸை பெட்ரோ தோற்கடித்தார். ஹெர்னாண்டஸ் 47.27 வீத வாக்குகளைப் பெற்றார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு தனது வெற்றி உரையின் போது, இது கொலம்பிய மக்களுக்கான வெற்றி என குஸ்டாவோ பெட்ரோ தெரிவித்தார். அத்துடன், கொலம்பியாவின் வெற்றிக்கு பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபடுமாறு அவர் அழைப்பு விடுத்தார். தனது கடுமையான விமர்சகர்களுக்கும் அவர் நேசக்கரம் நீட்டினார்.

கொலம்பியா எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து விவாதித்து, தீர்வுகளை கண்டறிய அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஜனாதிபதி மாளிகைக்கு வரவேற்கப்படுவார்கள் என்று குஸ்டாவோ பெட்ரோ கூறினார்.

எனது அரசாங்கத்தில் அரசியல் துன்புறுத்தலோ சட்ட ரீதியான துன்புறுத்தலோ இருக்காது. மரியாதையும் உரையாடலும் மட்டுமே இருக்கும். எதிர்கட்சியினர், விவசாயிகள், பழங்குடியினர், பெண்கள், இளைஞர்கள் அனைவரது கருத்துக்களையும் கேட்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 1980 களில் எம்-19 கெரில்லா போராளியாக இருந்த குஸ்டாவோ பெட்ரோ, பின்னர் அரசியலில் களமிறங்கி செனட்டராகவும் தலைநகர் பொகோட்டாவின் மேயராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### எதியோப்பிய கிளர்ச்சி குழு தாக்குதல்:

## அம்ஹார இனத்தவர்கள் 230இற்கும் மேற்பட்டோர் பலி!

அடிஸ் அபாபா, ஜுன் 21

எதியோப்பியாவின் ஒரோமியா பகுதியில் அம்ஹாரா இனக் குழுவைச் சேர்ந்த மக்கள் மீது கிளர்ச்சிக் குழுவினர் நடத்திய தாக்குதலில் 230இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் தொடரும் இன ரீதியான பதற்றங்களுக்கு மத்தியில் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 230 சடலங்களை நான் கணக்கிட்டேன். எங்கள் வாழ்நாளில் நாங்கள் கண்டிராத அம்ஹாரா இன மக்களுக்கு எதிரான மிகக் கொடிய தாக்குதல் இது என இந்தத் தாக்குதலில் இருந்து தப்பிய கிம்பி கவுண்டியில் வசிக்கும் அப்துல்-செய்த் தாஹிர் என்பவர் அசோசியேட்டட் பிரஸிடம் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களை பெரும் குழியைத் தோண்டி ஒரேயடியாக நாங்கள் புதைக்கிறோம். நாங்கள் இன்னும் சடலங்களைத் தேடி வருகிறோம். மத்திய இராணுவப் பிரிவுகள் இப்போது வந்துள்ளன. ஆனால், அவர்கள் வெளியேறினால் மீண்டும் தாக்குதல்கள் தொடரக்கூடும் என்று நாங்கள் அஞ்சுகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வாறான படுகொலைகள் மேலும் தொடரும் என அஞ்சுவதால் அம்ஹாரா இனக் குழுவைச் சேர்ந்த மக்கள் தங்கள் பகுதிகளில் இருந்து இடம்பெயரத் தயாராகி வருகின்றனர் என்று ஷாம்பெல் என்ற மற்றொரு நபர் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கையின் கீழ் ஒரோமியா பகுதியில் 30 வருடங்களுக்கு முன்னர் குடியேறிய அம்ஹாரா இனத்தவர்கள் கோழிகளைப் போல கொல்லப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.

இரண்டு சாட்சிகளும் தாக்குதல்களுக்கு ஒரோமோ விடுதலைப் படை (Oromo Liberation Army) என்ற அமைப்பு மீது குற்றஞ்சாட்டினர். ஒரோமியா பிராந்திய அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையிலும் ஒரோமோ விடுதலைப் படை மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)






# தினேஷ் கார்த்திக்கை புகழ்கிறார் டிராவிட்!

பெங்களூர், ஜூன் 21

"அவரின் அந்தவொரு தனித்திறனுக்காகத்தான் அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதை சிறப்பாக செய்து வருகிறார்" என இந்திய அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான தினேஷ் கார்த்திக்கை புகழ்ந்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுநர் ராகுல் டிராவிட்.

37 வயதான தினேஷ் கார்த்திக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய அணிக்குள் மீண்டும் வந்துள்ளார். 15ஆவது ஐ. பி. எல். தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக அவர் வெளிப்படுத்திய அபார ஆட்டத்தின் மூலம் இந்திய அணிக்கு அவர் உள்வாங்கப்பட்டார்.

தென்னாபிரிக்க தொடரில் விளையாடி முடித்துள்ள நிலையில், அயர்லாந்து தொடரில் விளையாட ஆயத்தமாகி வருகிறார் அவர். இந்நிலையில், தினேஷ் கார்த்திக்கை இந்திய அணியில் விளையாடத் செய்ததற்கான காரணத்தை ராகுல் டிராவிட் கூறியுள்ளார்.

"அவரை அணியில் தெரிவு செய்ய காரணமே அவரிடம் உள்ள அந்த தனித்திறன்தான். அவரின் அந்த திறன் ராஜகோட் போட்டியில் எங்களுக்கு பெரிய அளவில் கைகொடுத்தது. கடைசி ஐந்து ஓவர்களில் பெரிய அளவிலான ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தினார். அவரும், ஹார்திக் பாண்ட்யாவும் அந்த ஆட்டத்தை முடித்துக் கொடுத்த விதம் அற்புதம். மரண ஓவர்களில் அவர்களை எங்கள் அணியின் செயல்வீரர்கள் என சொல்வேன்.

இப்போதைக்கு கடைசி ஓவர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் சர்வதேச கிரிக்கெட் வீரர்களில் அவர்கள் இருவரும் இருக்கிறார்கள் எனக் கருதுகிறேன். அணியில் அவர் எதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளாரோ அதற்கான பங்களிப்பை கார்த்திக் சரியாக செய்து வருகிறார் - என்றார்.

# பங்களாதேஷை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள் அணி!

ஜமைக்கா, ஜூன் 21

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அணித் தலைவர் சகீப் அல் ஹசன் 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியா சார்பில் அல்ஜாரி ஜோசப், ஜேடன் சீல்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்ஸில் 265 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பிராத்வெயிட் 94 ஓட்டங்களும், பிளாக்வூட் 63 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் சார்பில் மெஹிதி ஹசன் 4 விக்கெட்களும், அபொட் ஹூசைன், கலீல் அகமது தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.


இதையடுத்து, பங்களாதேஷ் இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்து ஆடியது. அணித் தலைவர் சகீப் அல் ஹசன், விக்கெட் காப்பாளர் நுருல் ஹசன் பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தனர்.

நுருல் ஹசன் 64 ஓட்டங்களும், சகீப் அல் ஹசன் 63 ஓட்டங்களும் எடுத்தனர். மஹ்மதுல் ஹசன் ஜாய் 42 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில், பங்களாதேஷ் இனிங்ஸில் 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் கீமர் ரோச் 5 விக்கெட்களும், அல்ஜாரி ஜோசப் 3 விக்கெட்களும், கைல் மேயர்ஸ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 84 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி களமிறங்கியது. பங்களாதேஷ் வீரர் காலித் அகமது சிறப்பாக பந்து வீசினார்.



முன்னணி வீரர்களை விரைவில் வெளியேற்றினார். இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து திணறியது.

ஜோன் கம்ப்பெல், பிளாக்வூட் நிதானமாக ஆடி மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டனர். இறுதியில் மூன்றாம் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட்கள் இழப்புக்குகு 49 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் போட்டி தொடங்கியது. ஜோன் கேம்ப்பெல் - பிளாக்வூட் ஜோடி மேலும் விக்கெட்டை பறிகொடுக்காமல் அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட்களை மட்டும் இழந்து 88 ஓட்டங்கள் அடித்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2 போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# பந்தை பிடியெடுக்க முனைந்த நடுவர்!




கொழும்பு, ஜூன் 21

களத்தில் ஒரு கணம் களத்தடுப்பாளராக மாறி பந்தை பிடியெடுக்க முயன்றார் நடுவர் குமார் தர்மசேன. அந்தக் காட்சி தற்போது இணைய வெளியில் வைரலாகி உள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கை வந்துள்ளது. இரு அணிகளும் தற்போது 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றன.

நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியபோது, 35ஆவது ஓவரில் அலெக்ஸ் காரி அடித்தாடிய பந்து துணை நடுவராக கடமையில் நின்ற தர்மசேனவை நோக்கி சென்றது. அவரும் ஒரு கணம் தான் நடுவர் என்பதை மறந்து, பந்தைப் பிடிக்கும் நோக்கில் சென்றார். இருந்தும் கடைசி நொடியில் பந்தைப் பிடிக்காமல் தவிர்த்திருந்தார். பந்தும் சில அடிகள் முன்பாக வீழ்ந்தது. இந்தக் கட்சி இணையத்தில் இப்போது பிரபலமாகி வருகிறது.

குமார் தர்மசேன இலங்கை அணிக்காக 31 டெஸ்ட் மற்றும் 141 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸியின் தொடக்க வீரராக டிராவிஸ் களமிறங்குவார்!

## முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட்

சிட்னி, ஜூன் 21

இனி வரும் காலங்களில் டிராவிஸ் ஹெட் தொடக்க வீரராக டேவிட் வோர்னருடன் களமிறங்குவார் என அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் அடம் கில்கிறிஸ்ட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

28 வயதான டிராவிஸ் ஹெட் இலங்கைத் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார். மேலும், இவர் ஆஷஷ் தொடரிலும் சிறப்பாக விளையாடி தொடர் நாயகன் விருதை வென்றார்.

"நீண்ட நாள் நோக்கில் அநேகமாக அடுத்த 12 மாதங்களில் டிராவிஸ் ஹெட் அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரராக விளையாடுவார். அவர் தொடக்க வீரராக ஒருநாள் போட்டிகளில் விளையாடினால் அணிக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவார். மேலும் சிறப்பான தொடக்கத்தை கொடுத்து அணிக்கு வலுவான அடித்தளத்தை அளிப்பார் என நினைக்கிறேன்.

அரோன் பின்ஞ்சால் அடுத்த ஒருநாள் உலக கிண்ணம் வரை விளையாட முடியுமா எனத் தெரியவில்லை. அரோன் பின்ஞ் ஓய்வு பெற்ற பிறகு அந்த இடத்துக்கு இவர் சரியாக பொருந்துவார் என நினைக்கிறேன்" என்று கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். (ஐ)






# ஓய்வை அறிவித்தார் நெதர்லாந்தின் கப்டன்!

ஆம்ஸ்ரர்டாம், ஜூன் 21

நெதர்லாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் பீற்றர் சீலர் காயம் காரணமாக சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

34 வயதான பீற்றர் சீலர் 2006 முதல் நெதர்லாந்து அணியில் முக்கிய பங்காற்றினார். சகலதுறை வீரராக அணிக்காக விளையாடி வருகிறார்.

அவர், 57 ஒருநாள் போட்டியில் விளையாடி 57 விக்கெட்களை எடுத்துள்ளார். இருபது - 20 கிரிக்கெட்டில் 77 போட்டிகளில் விளையாடி 58 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

துடுப்பாட்டத்தில், ஒருநாள் போட்டிகளில் 591 ஓட்டங்களை அதிகபட்சமாக 96 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

2009,2014 இருபது -20 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து அணியை தோற்கடித்த நெதர்லாந்து அணியில் இடம் பெற்றவர் சீலர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எல்லை மீறுகின்ற பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 21

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்குபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமது கடமை எல்லை மீறி செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் பொலிஸார் ஈடுபடாத காரணத்தினால் பொலிஸாருடன் மோதலில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு அனைத்து மக்களிடமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதே வேளை குறைந்த பட்ச பலத்தை பிரயோகிக்குமாறு பொலிஸாருக்கு பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முல்லைதீவு ,அரநாயக்க, குருணாகல்,அதுருகிரிய உட்பட நாட்டின் பல பகுதிகளில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக அறிய வருகிறது. இதில் பாதுகாப்பு தரப்பினரும் பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். (அ)

# விரைவில் மரக்கறி தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 21

அடுத்த மூன்று மாதங்களில் சந்தைக்கான காய்கறிகள் வரத்து முற்றாக நிறுத்தப்படும் என பொருளாதார மையங்கள் மற்றும் மெனிங் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது 50 வீத சிறு காய்கறி விவசாயிகள் உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பயிர்ச்செய்கையில் இருந்து விலகியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

டிசெம்பர் மாதத்திலும் இது தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்கப்பட்டதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருண சாந்த தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பின்னர் நாட்டில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும், காய்கறிகளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் நிற்பதையும் காண முடியும் எனவும் அவர் கூறினார். (அ)






# எரிபொருள் கோரி ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 21

யாழ்ப்பாணத்தில் கா.பொ.த சாதாரன தர விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உரிய எரிபொருள் வழங்கப்படவேண்டும் அல்லது தமக்கான எரிபொருளை பெறுவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை ஒதுக்குமாறு கோரியே ஆசிரியர்களால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது ஆசிரியர்கள் பதாதைகளை ஏந்தியும் கோஷமெழுப்பியும் தங்களின் எதிர்ப்பினை வெளியிட்டனர். (அ-03)

# கீரிமலை வீடொன்றில் நடந்தது கொலையே!

## உடற்கூற்று பரிசோதனையில் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன். 21

கீரிமலைப் பகுதியில் வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமை உடற்கூற்றுப் பரிசோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசந்துறை பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தகவலை அடுத்து நேற்று 42 மற்றும் 62 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கீரிமலை, புதிய கொலனியில் வசிக்கும் ச. நடராசா என்னும் 63 வயதுடைய ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இவர் கடந்த 20 ஆண்டுகளாக கீரிமலையில் வசித்து வருகின்றார். நேற்று முன்தினம் அவர் வீட்டில் நினைவிழந்திருந்த நிலையில் காணப்பட்டதாக அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அறிக்கையிட்டுள்ளனர்.

இந்த மரணத்தில் காங்கேசன்துறைப் பொலிஸார் சந்தேகம் கொண்டதால், உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனையில் இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தொடர்பாக எழுந்த முரண்பாடு ஒன்றை அடுத்தே இந்தக் கொலை நடந்துள்ளது என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv
ஈழநாடு Eelanadu

## இலங்கையின்...

போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை அரசின் வருமானத்தை அதிகரிக்கவும் இயற்கை மின்சாரத்தை தயாரிக்கும் வேலைத்திட்டத்தை வெற்றி யாக்கிக்கொள்ளவும் அவுஸ்திரேலியா உதவும் எனவும் கிளேயர் ஓ நெய்ல் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் உள்துறை மற்றும் இணையப் பாதுகாப்பு அமைச்சர் கிளேயர் ஓ நெய்ல் இலங்கைக்கு வந்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வை சந்தித்த அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடன் கலந்துரையாடவுள்ளதாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த வார தொடக்கத்தில் அமைச்சர் பீரிஸ் மற்றும் அமைச்சர் கிளேயர் ஓ நெய்ல் ஆகியோருக்கு இடையில் இடம் பெற்ற தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து இந்த விஜயம் இலங்கைக் கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையி லான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியே அமைந்துள் ளது.

அவுஸ்திரேலியா மிகவும் கடினமான பொருளாதார காலங்களை எதிர் கொண்டுள்ள நிலையில் இலங்கைக்கு எவ்வாறு ஒத்துழைப்பை ஆழப்படுத்து வது மற்றும் உதவுவது மற்றும் ஆட் கடத்தல் உட்பட நாடுகடந்த குற்றங்கள் தொடர்பான ஈடுபாட்டை வலுப்படுத்து வது குறித்து அமைச்சர் கிளேயர் ஓ நெய்ல் இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் என தூதரகம் தெரி வித்துள்ளது. (அ)

## இலங்கைக்கு...

அவுஸ்திரேலியா 2022-2023 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 23 மில்லியன் டொலர்களை அபிவிருத்தி உதவியாக வழங்கும் எனவும் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பாதுகாப்பதில் வலுவான முக்கியத்துவத்துடன், சுகா தார சேவைகள் மற்றும் பொருளாதார மீட்புக்கு ஆதரவளிக்கும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## நாணய...

சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் செயற் குழு உறுப்பினர் டினூக் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டில் உண்மையான மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கும் குழுக்களின் ஒரு பகுதியினர் அல்ல, மாறாக மறைமுக அரசியல் நோக் கங்களைக் கொண்டவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் போராட்டங்கள் நிறுத்தப் படாது. எனினும் பொருளாதார நெருக்கடியால் முழு நாடும் பாதிக்கப் பட்டுள்ள நேரத்தில், பொருளாதார மீட்பு முயற்சிகளை சீர்குலைக்க இதுபோன்ற குழுக்களை அனுமதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கைக்கான நிதியுதவி தொடர் பில் பிரதமருடன் கலந்துரையாடுவதற்க ாக சர்வதேச நாணய நிதியம் நாட்டிற்கு வந்துள்ளது என்றும் டினூக் கொலம் பகே குறிப்பிட்டார். (அ)

## மேலும்...

சொந்தமான விசேட விமானம் மூலம் நேற்று அதிகாலை 3.50 அளவில் நாட்டை வந்தடைந்தனர்.

நீர்கொழும்பு, கொஸ்வாடிய மற்றும் மூதூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர் களே நாட்டை வந்தடைந்தனர்.

அவர்களை அவுஸ்திரேலிய கட லோரப் பொலிஸாரால் கைது செய்து நாடு கடத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

## நெருக்கடி...

இடையூறு விளைவித்தனர். இந்த ஆண்டு அக்குரேகொட பாதுகாப்பு கட்டடத் திற்கு மாத்திரம் 12 பில்லியன் ரூபா செல விடப்பட்டுள்ளது. இது வழக்கமாக தேர்த லுக்காக செல விடப்படும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

எனவே, இந்தப் பிரச்னை நிதியுதவியு டன் தொடர்புடையது அல்ல. ஆனால் இலங்கையின் தற்போதைய இக்கட் டான சூழ்நிலையில் இருந்து விடுபடு வதற்கான வழி இது.

இந்த அரசாங்கம் முழுத் தோல்வி யடைந்துள்ளது. ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவின் அரசாங்கம் முழுமை யாக தோல்வியடைந்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தி னால் அவர்கள் வழங்கிய வாக்குறு திகள் எதனையும் நிறைவேற்ற முடியுமென நம்ப முடியாது - என்றார். (அ)

## காலிமுக...

போராட்டக்காரர்களால் கட்டப்பட்ட இரண்டு கூடாரங்கள் நேற்று காலை பொலிஸாரால் அகற்றப்பட்டன.

அப்போது அந்த இடத்தில் பரபரப் பான சூழ்நிலை உருவானதுடன், 21 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நான்கு பெண்களும் 16 ஆண்களும் அடங்கியிருந்தனர்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக் காரர்கள் குழுவொன்று நேற்று முன் தினம் இரவு இந்த நுழைவாயில்களுக்கு முன்பாக கூடாரங்களை அமைத்துள் ளது. இதனால் அத்தியாவசிய சேவை களுக்கு அறிக்கை செய்யும் அதிகாரிக ளும் பல்வேறு நோக்கங்களுக்காக வந்த பொதுமக்களும் வளாகத்திற்குள் நுழைய முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும் நேற்று காலை பொலிஸார் கூடாரங்களை அகற்றி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர்.

சமூக ஆர்வலர்களான அனுருத்த பண்டார, இசுரு வர்ணகுலசூரிய மற்றும் அர்ஜூன ராஜபக்ஷ ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டனர். இதன்போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## ரணிலை...

வெளியான செய்திகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், பிரதமர் அலுவ லகமும் மறுத்துள்ளன.

இந்த செய்தியை வெளியிட்டுள்ள கொழும்பின் சிங்கள ஊடகம் ஒன்று, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், சாகர காரியவசத்தின் பதிலையும் பதிவிட்டுள்ளது.

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஜனாதிபதியினால், தனிப்பட்ட முறையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டதா என்பது தனக்குத் தெரியாது.

எவ்வாறாயினும், அத்தகைய நடவ டிக்கை இருந்தால், முதலில் கட்சிக்கு அறிவிக்கப்படவேண்டும்,

எனினும் கட்சி என்ற வகையில் அத்த கைய அறிவிப்பு எதுவும் வரவில்லை என்று சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலாக, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவருக்கு பிரதமர் பதவியை வழங்கு மாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா என வினவிய போது, அவ்வாறான எந்தவொரு கோரிக் கையும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், வேறு சில பிரச்னைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை விடுத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுஜன பெர முன பிரதமர் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்கிடையில், இது குறித்து பிரத மர் அலுவலக அதிகாரி ஒருவரும், ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான செய்தி பொய் யானது என்று குறிப்பிட்டுள்ளார். (அ)



# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆஸி. அமைச்சர் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் அவுஸ்திரேலிய முதலீடுகளை ஊக்குவிப்பதில் அவுஸ் திரேலிய அரசு ஆர்வமாக உள்ளது - என்று அந்நாட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிளேர் ஓ நீல் தெரிவித்தார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண் டுள்ள அவர், நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து பேச்சு நடத்தி னார்.

இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவையும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு களையும் தமது அரசு வழங்கும் எனவும் ஆஸி. அமைச்சர் இதன்போது குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன், ஆட்கடத்தல், கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரை யாடப்பட்டுள்ளது. (ஐ)

## நீதிமன்ற...

இடம்பெற்றபோதே, ஜனாதிபதி சட்டத் தரணி ரொமேஷ் டி சில்வா ஊடாக அவர் இதனை கூறியுள்ளார்.

அத்துடன் இது தொடர்பிலான ஐந்து அடிப்படை உரிமை மனுக்கள் மீதான மேலதிக பரிசீலனை இன்று செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள் ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இதேவேளை-

பாராளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேரா பெயரிடப்பட்டுள்ளமைக்கு எதிராக நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவி னால் உயர் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தம்மிக்க பெரேராவின் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்பதால் உடனடியாக அதனை இரத் துச் செய்யுமாறு மனுதாரர் இதில் கோரி யுள்ளார். (அ)

## கடும்...

நிலக்கரியை கொள்வனவு செய்யாது போனால், கடுமையான மின்சார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யவேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு சுமார் 600 மில்லியன் டொலர்களை செலவிட நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## நெருக்கடியிலிருந்து...

வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியி லேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கை யில்-

"ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த் துக்கள். அவர் தனது வாழ்வின் மற் றொரு வருடத்தில் அடியெடுத்து வைக் கும்போது அனைத்திற்கும் நல்வாழ்த் துக்கள். அவரது இருப்பு எப்போதும் பலத்தின் ஆதாரமாக இருந்து வருகிறது.

மேலும் நெருக்கடியிலிருந்து இந்த நாட்டை அவர் மீட்டெடுப்பார் என்ப தில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது" என பதிவிட்டுள்ளார். (அ)

## ஜூலை முதலாம்...

அங்கஜன் இராமநாதன் மற்றும் பிரதேச செயலர்கள் மற்றும் வடக்கு பிராந்திய பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் மற்றும் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தின் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் தத்தம் பிரதேச செயலகங்களின் பொறுப் பில் செயற்படும்.

நாளாந்த கையிருப்பு தகவல்கள் பிர தேச செயலக உத்தியோகத்தர்களால் நேரடியாக சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிர தேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்து ழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்த பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தீர்மானத்துள்ளது.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை அறிமுகமாகிறது. அது ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது.

அதன்படி மக்கள் தமது வதிவிடப் பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளை பெறும் வகையில் பொறிமுறை உருவாக்கப் படும்.

சுகாதார சேவையினருக்கான எரி பொருள் விநியோகத்துக்கு தனியான ஏற் பாடுகள் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தை தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் திணைக் களத் தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலக எல்லை களுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச. நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரி பொருளை வழங்கும்.

- ஆகிய தீர்மானங்கள் நேற்றைய கூட் டத்தில் எடுக்கப்பட்டன. (அ-03)

ஈழநாடு
Eelanadu

# 21ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜூன் 21

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான சட்டமூலம் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விரைவில் பாராளுமன்றத்தில் அது முன்வைக்கப்படும் என ருவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தத்தை முன்னெடுத்துச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சுகாதார பணியாளர்களுக்கு விரைவில் பிரத்தியேக எரிபொருள் கொடுப்பனவு!

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்னை சுகாதார துறையினரை பெரிதும் பாதித்துள்ளது.

இந்நிலை தொடருமாக இருந்தால் சுகாதார துறை முடக்க வேண்டிய நிலையேற்படும் என அதிகாரிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.

எனவே, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தகுதியான சுகாதாரப் பணியாளர்களுக்கு பிரத்தியேகமாக எரிபொருள் கொடுப்பனவு ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற பெரிதும் உதவும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## பிரசவித்த தாய் உயிருக்கு போராட்டம் மருத்துவர் எரிபொருளுக்காக வரிசையில்!

### நுகேகொடையில் இந்த அவலநிலை

கொழும்பு, ஜூன் 21

குழந்தையை பிரசவித்த தாய் மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கையில், அவருக்கு சிகிச்சையளிக்க வேண்டிய மருத்துவர் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - நுகேகொடை மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளதாக மருத்துவர் ஒருவர் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், "குழந்தையை பிரசவித்த பின்னர் தாய்க்கு குருதிபெருக்கு ஏற்பட்டிருந்தது, மருத்துவர் எரிபொருளை பெறுவதற்கான வரிசையில் நின்றிருந்தார், முச்சக்கரவண்டி கூட கிடைக்கவில்லை, எரிபொருள் வரிசையில் நின்ற மருத்துவரை கூட்டி வருவதற்காக வாகனங்களை அனுப்புவதற்கு பொலிஸார் முயன்றனர். இது இலங்கையின் கிராமமொன்றில் இடம்பெறவில்லை - நுகேகொடைல் இடம்பெற்றது. யார் இதற்கு பொறுப்பு?" என்று அந்த மருத்துவர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 08 - 1928



இறப்பு 16 - 06 - 2022

### திருமதி யோகாம்பாள் கணேஷன்

யாழ். உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டி தொடர்மாடி, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட யோகாம்பாள் கணேஷன் கடந்த 16-06-2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கணேஷன் அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான முத்து நாயகம் காசிப்பிள்ளை, செல்லமுத்து பெரியதம்பி, கனகபூரணி கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,தேவகி ( Perth, அவுஸ்திரேலியா), துவாரகி ( Devon, பிரித்தானியா), ஜீவகி, றூபகி ஆகியோரின் அன்புத் தாயாரும்,சூரியகுமாரன், ராஜகுமார், ரட்ணகுமார், விக்னராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கருணாகரன், மனோகரன், பகீரதன், பகீரதி, தசரதன், ரவிரதன், மனோரதி, ஜெயரதி, ஞானரதி, தயானந்தன் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும்,கணேஷ்குமார், ஹம்ஷா, ரோசாந்தி, தரன், ரமண், மதுரா, ஐங்கரன், றிஷிகரன், நிவேதா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், Ezra, Marie, Genevieve ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு :
Monday, 20 Jun 2022 5:30 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Tuesday, 21 Jun 2022 1:00 PM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Tuesday, 21 Jun 2022 4:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு
**தேவகி - மகள்**
**Mobile : +61438980271**
**துவாரகி - மகள்**
**Mobile : +447396523628**
**ஜீவகி - மகள்**
**Mobile : +16472367334**
**றூபகி - மகள்**
**Mobile : +14372413005**

## இந்தியா வழங்கும் யூரியா ஜூலை 6 நாட்டுக்கு வரும்

கொழும்பு, ஜூன் 21

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 65,000 மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் ஜூலை மாதம் 06ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக விவசாய மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டு மகா பருவத்தில் உர விநியோகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இதனையடுத்து, விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு 50,000 மெற்றிக் தொன் உரமும் சோளச் செய்கைக்கு 10,000 மெற்றிக் தொன் உரமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 6ஆம் திகதி யூரியா உரம் கிடைத்து சில நாட்களில் விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உர விநியோகத் திட்டத்தின் வெற்றிக்காக ஒவ்வொரு அதிகாரியும் ஒவ்வொரு நிறுவனமும் உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முறைகேடுகள் நடக்காமல் பார்த்துக்கொள்வது அதிகாரிகளின் பொறுப்பு என்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக அந்தஸ்து பாராமல் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)







## மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 11 - 1946



இறப்பு 16 - 06 - 2022

### கந்தையா சபாநாதன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சபாநாதன் கடந்த 16-06-2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பையா கந்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,பத்மாவதி(லலிதா) அவர்களின் அன்புக் கணவரும்,செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தையும், கோமதி அவர்களின் அன்பு மாமனாரும்,பத்மநாதன்(கனடா), ரகுநாதன்(இலங்கை), காலஞ்சென்றவர்களான சண்முகநாதன்(இலங்கை), ஜெகநாதன்(லண்டன்) மற்றும் கமலநாதன்(கனடா), காலஞ்சென்ற யோகநாதன்(லண்டன்), ரவீந்திரநாதன்(லண்டன்), கலாரஞ்சினி (கனடா), சிதம்பரநாதன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரெத்தினம், கமலாம்பாள், சுபத்திராதேவி, பராசக்தி, தர்மராணி, கலையரசி, அனுஷியா, சசிகலா, மகேஸ்வரி ஆனந்தராஜா, சரஸ்வதி தர்மராஜா, சசிலாதேவி ஜெயபாலன், சுசானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகீதன் (லண்டன்), டில்குஷி(ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், Reyaan, Rishaan ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

கிரியை :
Thursday, 23 Jun 2022 1:30 PM
Croydon Cemetery Mitcham Rd, London CR9 3AT, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், சகோதரன்**

தொடர்புகளுக்கு :
**பத்மாவதி(லலிதா) - மனைவி**
**Mobile : +442085437041**
**செந்தூரன் - மகன்**
**Mobile : +447956052224**
**ரவீந்திரநாதன் - சகோதரன்**
**Mobile : +447708834461**
**கஜன் - உறவினர்**
**Mobile : +447710450712**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - அசுரவேட்டை,மூக்குத்தி அம்மன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

இரவு
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு